415

9-MAR 1933

தொகுதி 12.] 1933ஞு பிப்பிரவரிமீ [பகுதி 1.

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தா
கா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுமிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்த தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவனிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவனை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்

9 - MAR 193

பகல்நேரத்தில் இவ்வாறு ஹேமவதி நினைத்து மடத்துக்குச்செல்ல முயன்றிருந்தால் அதில் ஆச்சரியமொன்றும் இல்லை. ஆனால் இரவில் பதினொரு மணிக்கு அவள் தனியாக மடத்துக்கும் பூமிக்குள் ஏற்படுத்தப் பட்டிருக்கும் அறைக்கும் தனியாகச் செல்வதென்றால் அது மிதமிஞ்சிய உணர்ச்சியால் உண்டாகக் கூடிய தைரியமேயன்றி இயற்கை தைரியமாகாது. அவள் உடனே மற்றும் சில உடைகளை அணிந்துகொண்டாள். கையில் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு அப் படுக்கையறையி னின்றும் புறப்பட்டாள். மாளிகையில் எல்லாரும் நிசப்தமாகத் தூங்குகிறார்களா? என்று கவனித்தாள். நிசப்தமாக இருந்தபடியால் அவள் சர சர வென்று கடந்து பல அறைகளையும் தாழ்வாரங்களையும் தாண்டி அக் கட்டடத்தின் மேற்கு மூலைக்கும் வந்து சேர்ந்தாள். அங்கு வந்ததும் அவள் தன் மனதில், 'ஆ, ஏதோ பயம் ஆரம்பத்தில் என்னை வாட்டிற்று. ஆனால் இப்போதோ அதிக பலஹீனம் தெரிகிறதே. என்னை யாரோ விரைவில் மிரட்டித் தன்னிடம் நான் அடங்கிவிடும்படி செய்வார் போல் உணர்ச்சி தோன்றுகிறதே' என்று பலவாறு சிந்தித்தாள். ஆகையால் திரும்பி விடலாமென நினைத்தாள். ஆயினும் அவளுக்குத் தோன்றிய உணர்ச்சி அதற்கும் இடந்தா வில்லை. அவளுக்குக் கடுகளவாவது தைரிய மென்பது இருப்பது உண்மையானால் மடத்தையும் பார்த்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டாள். அதன்படியே அவள் மடத்தின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள்.

அவள் மடத்தில் கொஞ்சதூரம் சென்றதும் திடீரென்று ஓரிடத்தில் நின்று நாற்புறமும் சுற்றிப்பார்த்தாள். எல்லாம் ஜில்லென்று நிசப்தமாக இருக்கிறது. ஆனால் அவளுக்கு அச்சத்தைத் தரக்கூடியது ஒன்று மிருக்கவில்லை. பிறகு அவள்

18657
600 008

பூமிக்குள் செல்ல இருக்கும் வழியைத் திறந்தாள். அப்போது அவள் மனதில் அச்சம் தோன்றியது. ஏதோ பயங்கரமான ஒன்றைக் கண்டதால் அவள் அவ்வாறு அச்சப்படவில்லை. ஆயினும் அதில் தன் குடும்பத்தைச் சேர்ந்த பலருடைய பிரேதங்கள் புதைக்கப்பட்டுச் சமாதிகளும் கட்டப்பட்டிருக்கின்றன அல்லவா? மேலும் அதில்தானே ராஜசேகரனும் மாண மடைந்தான். இந்த எண்ணங்களெல்லாம் அவளுக்கு அச்சத்தை உண்டாக்கின. அன்றியும் அங்கு அக்குடும்பத்தை ஸ்தாபித்தவர் உருவச்சிலையொன்றும் வீர உருவத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அச்சிலையைக் கண்டோ அல்லது அங்கு சமாதிகள் பல இருக்கின்றன என்பதைக் கண்டோ அவள் அஞ்சிவிடவில்லை. அந்த இரவில் தனியே அந்த இடத்தில் நின்றிருப்பதில் அவள் பெருமையும் அடைந்தாள். பிறகு அவள் அடிமேல் அடி வைத்துக்கொண்டே நாலு பக்கங்களிலும் பார்த்துக்கொண்டு போனபோது திடீரென்று அவள் அங்கம் முழுதும் நடுங்கியது. ஏன்? அங்கு ஒரு பலகையின்மீது ஒரு மனிதனுடைய பிரேதம்போல் ஒன்று காணப்பட்டதுதான் அதற்குக் காரணம். ஆயினும் அவள் சமீபத்தில் சென்று தன் கையிலிருந்த விளக்கின் உதவியால் பார்த்தபோது அது பிரேதமல்லவென்றும் யாரோ ஒரு மனிதன் தூங்குகிறான் என்றும் தெரிந்துகொண்டாள். முகத்தை உற்றுப் பார்த்ததும் அது ராட்சஸ குப்பனே என்று உணர்ந்ததும் அவள் பீதியுடன் முகம் வெளுக்க நின்றாள்.

55-வது அத்தியாயம்

—:(o):—

மடத்தில் நிகழும் சம்பவம்

அங்கே படுத்திருப்பது ராட்சஸ குப்பன் என்று அறிந்ததும் ஓடிப்போய் விடலாமா என்று நினைத்தாள். பிறகு கூச்சல் போட்டு ஜனங்கள் கூடியதும் அந்த அயோக்கியனைக் கைது செய்து விடலாமா என்றும் யோசித்தாள். ஆனால் இதற்குள் அவனது முகத்தில் விளக்கின் ஒளி வீசியதால் அவன் விழித்துக்கொண்டு விட்டான். உடனே அவன் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டிருந்த கெட்டிக்கப்பட்ட கைத்துப்பாக்கியை எடுத்து அவளை நோக்கிச் சுடுபவன்போல் பிடித்துக்கொண்டு அவளை உற்று நோக்கினான். அவள் மனங் கலங்கினாள். அவளது தேகம் வியர்த்துவிட்டது. ஆனால் அவள் ஹேமவதி சீமாட்டி என்று அறிந்துகொண்ட ராட்சஸ குப்பன் துப்பாக்கியைத் தாழ்த்திவிட்டு அசட்டுச் சிரிப்புடன், 'சீமாட்டியே! இந் நேரத்தில் நீ இங்கு வந்ததன் காரணம் என்ன?' என்று கேட்டான். சீமாட்டியும் சிறிது தைரியத்தை அடைந்து நாற்புறங்களிலும் பார்த்து ராட்சஸ குப்பனுடன் வேறு யாருமில்லை யென்றும், அவன் தனியாகவே அங்கு இருக்கிறான் என்பதையும் தெரிந்துகொண்டு மிக்க தைரியத்துடன், 'நீ இவ்வாறு என்னைக் கேட்பதைவிட நீ இங்கு வருவதற்கு உனக்கு என்ன தைரியம் என்று நான் கேட்பதுதான் இப்போது பொருத்தமாக இருக்கும்' என்றாள். அவன் சிறிதும் அச்சமடையாதவனைப்போலவும், அங்கு இருப்பது குற்றமல்ல என்று கருதுபவன்போலவும், 'நல்ல வசதியான இடம் எனக்கு வேறு கிடைக்காததால் இவ்விடம் வந்து தங்கவேண்டியதாயிற்று' என்று விடையளித்தான்.

அவன் கொடுத்த விடையால் அவளைக் கண்டு அவன் சிறிதும் பயப்படவில்லை என்று நினைத்து அவனுடைய உண்மையான நிலைமையையாவது தெரிந்துகொண்டு விடலாமென்னும் எண்ணத்துடன், 'குப்பா! இப்போது நான் என்னுடைய சேவகர்களைக் கூப்பிட்டு உன்னைக் கைது செய்துவிட்டால் என்ன செய்வாய்? நான் ஏன் உன்னை அவ்வாறு செய்யக் கூடாது?' என்று கேட்டாள். அதற்கு அவன் சிறிதும் விட்டுக் கொடுக்காமல், 'என்னைக் காட்டிக் கொடுக்க உன்னால் முடியாது. உன்னுடைய விஷயங்கள் பல எனக்குத் தெரியும். அவை வெளியாகாதிருப்பதற்காகவாவது நீ என்னுடன் சுமுகமாக நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது' என்று கூறினான். அப்போது ஹேமவதி சீமாட்டி தன் அந்தரங்கங்களை யெல்லாம் அறிந்திருக்கும் மாகதம் ஒருகால் அவற்றைக் குப்பனிடம் சொல்லி விட்டாளோ என்று சந்தேகித்தாள். ஆனால் அன்று காலையிலும் அவள் கிருஷ்ணகிரிக்குப் புறப்படுவதற்குமுன் மாகதத்தைச் சந்தித்தபோது அம்மாது சீமாட்டியிடம் அவளது அந்தரங்கங்களை யாரிடமும் சொல்லவில்லை யென்றும், ஆனால் முன்னாள் இரவு ராஜேஸ்வரி பக்குவமாகத் தெரிந்துகொண்டு விட்டாளென்றும், ஆகவே அவள் தவிர வேறு யாருக்கும் தெரியாதென்றும் உறுதி கூறியிருக்கிறாள், ஆதலால் குப்பனிடம் மாகதம் சொல்லியிருப்பாளோ என்றும் நினைக்க முடியவில்லை. எதற்கும் விசாரித்துவிடலா மென்னும் எண்ணத்துடன் குப்பனைப் பார்த்து, 'என்னுடைய விஷயங்கள் உனக்கென்ன தெரியும்? தெரிந்திருந்தால் அவற்றைச் சொல் பார்க்கலாம்' என்றாள்.

அப்போது அவன் சிறிது ஆத்திரமடைந்து, 'அவற்றைச் சொல்லவேண்டுமா? எனக்கொன்றும் தெரியாது

என்று நினைத்துக்கொண்டிருக்கிறாயோ? முதன் முதலில் எனது நண்பனான ராஜசேகரனுடைய மரணத்தைப்பற்றிய இரகசியம். இது விஷயமாய் நான் மரகதத்தினிடமும் பேசியிருக்கிறேனே, அவள் உன்னுடன் பல இரகசியங்களையெல்லாம் வைத்துக்கொண்டிருக்கிறாள் அல்லவா?' என்று கேட்டான். அதனால் சிறிது மனக்குழப்பமடைந்த அவள், 'உனக்கும் மரகதத்துக்கும் சினேகமுண்டு என்பதை அவள் ஒரு முறையாவது என்னிடம் சொன்னதில்லை. அவளும் நானும் அதிக நெருக்கமுடையவர்களாக ஏன் இருக்கிறோமென்பது உனக்குத் தெரியுமா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'அன்று நான் உன் குழந்தையை அபகரித்துக்கொண்டுபோய் நடுக்காட்டில் போட்டுவிட்டபோது அவள் அக்குழந்தையை எடுத்து வளர்த்திருக்கலாமென்றும், அதனால் நீங்கள் இருவரும் சினேகமாக இருக்கலாமென்றும் நான் நினைக்கிறேன்' என்றான், அதைக்கேட்ட அவள் சந்தோஷமடைந்து இந்த இரகசியத்தைமட்டும் மரகதம் அவனிடம் சொல்லிவிடவில்லை என்பதை உணர்ந்து வெளிப்பார்வைக்கு அவன் சொல்வதே சரியெனக் காட்டிக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன், 'ஆம், நீ சொல்வது சரிதான்' என்றாள்.

பின்னர் ராட்சஸகுப்பன் அவளை அடக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன், 'எனது நண்பன் ராஜசேகரன் பத்தொன்பது வருஷங்களுக்கு முன்பு விசித்திர மரணத்தை அடைந்திருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. அவன் இக்குளத்தில் விழுந்து இறந்து விடும்படியாக அவ்வளவு முட்டாள் அல்ல. நீ மனிதனை ஸ்மரணை தப்பும்படி செய்யும் வாசனை புட்டியை வைத்துக்கொண்டிருந்தாயல்லவா? அதை நான் உன் வீட்டில் கொள்ளை யடித்தபோது எடுத்துக்கொண்டு போனேன். அப்போதுதான் நீ அதன் துணை

யைக்கொண்டு ராஜசேகரனைக் கொன்றிருக்க வேண்டுமென்று நிச்சயித்தேன். நான் ஆரம்பத்தில் ராஜசேகரன் என்னும் பெயரைச் சொன்னபோதே உன் முகம் வெளுத்துப் போன துடன் நீ அக் குளத்தையும் பார்த்தாய். அவன் இறந்து போனான் என்பது யாருக்கும் தெரியாது. அவன் கவலே யால் எங்கோயோ ஓடிப்போனான் என்றுதான் அப்போது பத்திரிகையில் காணப்பட்டது. நான்தான் தற்செயலாக அவனுடைய பிரேதத்தை இக்குளத்தில் கண்டு அதை என் நண்பர்களின் துணையால் வெளியே எடுத்து ஒரு டாக்டருக்கு விற்றுவிட்டோம்' என்றதும் ஹேமவதி சீமாட்டி கதறிப் பெருமூச்சு விட்டாள். ஒரு அயோக்கியனான மனிதன் தன் எதிரில் சமமாக நின்றுகொண்டு தன் விஷயத்தையெல்லாம் தைரியமாகப் பேசுவதுபற்றி அவள் வருத்தமடைந்தாள். எனினும் பழைய விஷயங்களுக்காக இப்போது அவனுக்கு ஏன் பயப்படவேண்டும் என்றும் நினைத்தாள். அவள் இவ் வாறெல்லாம் மனத்திலேயே யோசித்துக்கொண் டிருக்கை யில் குப்பன் அவளைப் பார்த்து, 'பழைய சங்கதிகளைப் பேசு கிறேம் என்று நினைக்கவேண்டாம். என் வாழ்க்கையில் சமீப காலத்திலும்கூட சில விஷயங்கள் நடந்திருக்கின்றன. அவை உன்னை என் அருகில்கொண்டு வந்திருக்கிறது. அதி ருக்கட்டும்; ராஜசேகரனை நீ கொன்றுவிட்ட விஷயம் எனக் குத் தெரியுமாதலால் நீ என்னை எவ்விதத்திலும் துன்புறுத்த முடியாது. மேலும் மற்றொரு காரணம் யாதெனின்' என்று சொல்லி முடிப்பதற்குள் சீமாட்டி, அதிக பீதியடைந்து இன் னும் எதைத் தெரிந்துகொண்டிருக்கிறானே என்னும் எண் ணத்துடன் அவனை உற்று நோக்கினாள்.

அப்போது அவன், 'இன்னொரு காரணம் என்னவென் ருல், சில தினங்களுக்குமுன் நான் இரத்தினபுரிக்கு அருகில்

இருந்தபோது ஒரு விஷயத்தை அறிந்தேன். அதாவது உன்னுடைய அந்தரங்க வேலைக்காரியாக இருந்த மந்தரை, என்ன? மந்தரை என்று சொல்லும்போதே உன் முகம் வெளுக்கிறது. உன் தேகம் நடுங்குகிறது. ஆகையால் நான் நினைப்பது உண்மையே என்று ஏற்பட்டுவிட்டது. அவள் திடீரென்று இறந்துபோனதற்கு நீ தானே காரணம்' என்றான். அதைக்கேட்ட அவள் அதிக ஆத்திரத்துடனும் கோபத்துடனும், 'என்னடா, ராட்சதனே!' என்றாள். அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. அப்போது ராட்சஸ குப்பன், 'என்ன சொன்னாய்? அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நீ எப்படி வேண்டுமாயினும் அழைக்கலாம். நீ இப்போது என் கையில் அகப்பட்டுக்கொண் டிருக்கும்வரையில் நீ என்ன சொன்னால்தான் என்ன? உடனே ஆளைக்கொன்றுவிடக்கூடிய விஷத்தை நீ கையில் வைத்துக்கொண்டிருக்கும் போது மந்தரையைக் கொன்றிருக்கமாட்டாய் என்று எப்படிச் சொல்வது?' என்றான். அதற்கு ஹேமவதி சீமாட்டி, 'போதும், போதும்; பேசவேண்டாம். என்மீது இப்படிப் பட்ட அபாண்டமான பழியையெல்லாம் சுமத்தவேண்டாம். அது கிடக்கட்டும். நீ இங்கே ஏன் மறைந்துகொண்டிருக்கிறாய்? முன்னமே என் வேலையாட்கள் எல்லாம் சந்தேகப் படுகிறார்கள்;' என்றதும் குப்பன், 'ஓ! நேற்றுதான் உன் வேலைக்காரன் ஒருவன் இங்கே வந்து தேடிக்கொண்டிருந்தான். நான் பக்குவமாக மறைந்துகொண்டேன். என்னை உள்ளே போட்டு அவன் பூட்டிவிடாமற் போனானே என்று நீ நினைக்கலாம். ஆயினும் இதோ பார் என்னுடைய ஆயுதங்கள்' இந்த இரத்தினபுரியிலுள்ள எப்படிப்பட்ட பூட்டையும் தூள் தூளாகச் செய்து எல்லாக் கதவுகளையும் திறந்துவிடும்' என்றான்.

அதற்கு ஹேமவதி சிமாட்டி, 'உன்னிடம் இத்தகைய ஆயுதங்கள் இருக்கிறதென்பதை நான் அறிவேன். நீ இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய்? உடனே வெளியே போய்விடு. போவதற்கு ஏதேனும் பணம் கேட்பாய் என்று நினைக்கிறேன்' என்றாள். அப்போது அவன், 'அவசரப்பட வேண்டாம், நான் இங்கிருந்து போவதற்குமுன் அப்படிப் போவதால் எனக்கு எத்தகைய ஆபத்தும் ஏற்படாது என்பதை நான் அறியவேண்டும்' என்று கூறினான். அதைக் கேட்ட சிமாட்டி, 'என்ன ஆபத்து? இங்கிருந்துபோனால் உனக்கு ஆபத்தா நேரிடும்?' என்று கேட்டதும் குப்பன், 'நான் இரத்தினபுரியிலோ அல்லது அதற்குச் சமீபத்திலோ இருக்கமுடியாமற் போனதால்தான் இங்குவந்து மறைவாகத் தங்கி யிருக்கிறேன். இங்கு யாரும் வரமாட்டார்கள் என்று தெரிந்ததால்தான் இங்கு வந்தேன். இவ்வளவு சீக்கிரத்தில் உன்னைச் சந்திப்பேன் என்று நான் நினைத்ததேயில்லை. நான் இங்கிருந்து விரைவில் போய்விடுவதோ அல்லது தாமதிப்பதோ என்பது இரத்தினபுரியில் நடைபெறும் ஒரு விஷயத்தைப் பொருத்திருக்கிறது. நீ சமீபத்தில் வெளியான பத்திரிகையைப் பார்த்தாயா? ஏதேனும் திடுக்கிடக்கூடிய சம்பவத்தில் என் பெயர் சம்பந்தப்பட்டு வெளியாய் இருக்கிறதா?' என்று கேட்டான். அப்போது சிமாட்டி பள்ளக்குடிசையில் நடந்த கொலை சம்பந்தமாகத்தான் அவன் ஏதோ பேசுகிறான் என நினைத்து அதிக வெறுப்புடன் அங்கிருந்து போய்விடுபவள்போல் திரும்பினாள். அதைக்கண்ட ராட்சஸ குப்பன், 'இரு, போய்விடாதே. நமது விஷயம் இன்னும் முடிந்துவிடவில்லை. நான் கேட்ட கேள்விக்கு நீ பதில் சொன்னாலொழிய நான் இந்த இடத்தைவிட்டுச் சீக்கிரத்தில் போகமுடியாது' என்றான்.

அப்போது சிமாட்டி, 'ஓ! அது உன்னுடைய வேலை

தானோ?' என்று அதிக வெறுப்படைந்தவள்போல் கேட்டாள். அவளும் இத்தகைய கொடுமைகளைச் செய்திருக்கலாமென்றாலும் தான் நிச்சயமாகச் செய்த தவறுதலில் யாருமே குற்றம் காண்பதில்லை. பிறர் குற்றத்தை மட்டும் பிரமாதமாக எடுத்துச் சொல்வார்கள். அதுபோல ஹேமவதி சீமாட்டியும் தன் குற்றங்களை மறந்து குப்பனின் கொடுமையைக் கண்டு வெறுப்படைகிறாள். குப்பனும் தான் செய்த காரியத்தை ஒப்புக்கொள்ளச் சிறிதும் பின்வாங்காமல், 'ஆம்: பள்ளக்குடிசைக் கொலைதானே! அது என் வேலைதான். அது சம்பந்தமாக உனக்கும் வந்தனம் செலுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனின் உன்னிடமிருந்து எடுத்துக்கொண்டு போன அந்த மயக்கத்தைத் தரும் வாசனைபோன்ற விஷம் தான் எனக்கு அதிக உதவியாய் இருந்தது. அதைப்பற்றிப் பெரும் பேச்சாக இருக்கிறதா? என்பதை உடனே சொல்' என்று கேட்டான். அதற்குச் சீமாட்டி, 'எனக்குத் தெரிந்த வரையில் உன்மீது யாரும் சந்தேகப்படவில்லை யென்று நிச்சயமாகச் சொல்வேன். முதல்நாள் யாரோ பேசிக்கொண்டார்கள். பிறகு அந்தப் பேச்சே காணோம். நீ இங்கிருந்து உடனே போய்விடலாம். செலவுக்குப் பணமில்லை யென்றால் நான் வேண்டுமாயினும் தருகிறேன்' என்றாள்.

அப்போது ராட்சஸ குப்பன், 'இரத்தினபுரியில் இந்தக் கொலை சம்பந்தமான பேச்சு இல்லை யென்றும், என்மீது யாரும் சந்தேகப்படவில்லை யென்றும் நீ நிச்சயமாகச் சொல்வதால் நான் இங்கிருந்து போய்விடுவதற்கு எவ்வித ஆட்சேபமும் இல்லை. உன்னிடம் அதிகமாக ஏதேனும் பணமிருந்தால் நூறு பவுன் நோட்டு ஒன்று கொடுத்தால் போதும். நான் மிக நல்லவன் என்பது உன் ஞாபகத்தில் இருக்கட்டும். நீ எப்போது வேண்டுமாயினும் என்னைச்

சொல்லி யனுப்பினால் நான் வந்து உனக்காகவேண்டிய காரியங்களைக் கவனிப்பேன். நான் கடுக்குப்பத்தில் கோபாலன் தம்பதிகள் வீட்டில்தான் இருப்பேன். அங்கேதான் என்னை நீங்கள் ராஜசேகரனும் சந்தித்துச் சினேகமானான். உன்னைப் போன்ற பலர் என் வேலையை வாங்கக் கூடியவர்களாக இருந்தால்தான் எனக்கு நல்ல கிராக்கி கிடைக்கும்,' என்றான். அப்போது சீமாட்டியின் மனதில் ஒரு எண்ணம் உதயமாயிற்று. ஆ, என்ன பயங்கர எண்ணம்! தன் மகள் ராஜேஸ்வரியின் ஞாபகம் அவளுக்கு வந்தது. அவள்தானே இப்போது சீமாட்டிக்குப் பெரும் எதிரியாக இருக்கிறாள். சீமாட்டியின் இரகசியங்கள் பல அவளுக்குத் தெரிந்துவிட்டிருக்கிறது. ஆகவே தன் மகளையே தொலைத்துவிடலாமா என்று நினைத்தாள். எப்படிப்பட்ட கொடிய வேலை செய்வதற்கும் எதிரில் குப்பன் காத்துக்கொண்டிருக்கிறான். ஆனால் அவ்வளவு பெரிய தீமையான காரியத்தில் இறங்க அவள் மனம் துணியவில்லை. ஆகவே ஒருவாறு தன் மனதில் தோன்றிய எண்ணத்தை அடக்கிக்கொண்டு அதைப் பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்காமலே இருந்துவிட்டாள்.

அவள் எதையோ சிந்தித்துக்கொண்டிருக்கிறாள் என்பதை அவளது முகத்திலிருந்தே அறிந்துகொண்ட குப்பன், 'என்ன யோசிக்கிறாய்? என்னால் ஆகவேண்டிய வேலை ஏதேனும் இருக்கிறதா? அப்படி இருந்தால் உடனே தயங்காமல் சொல். எனக்குமட்டும் தக்கபடி பணம் கொடுப்பதாக இருந்தால் எந்த வேலையையும் செய்வேன். உன் மெல்லிய கரங்கள் செய்யக்கூடாத கொலைபோன்ற காரியங்களையும் இதோ, இந்த என்னுடைய கைகள் சிறிதும் ஈவு, இரக்கமென்பது இல்லாமல் செய்து முடித்துவிடும். எதையும் என்னிடம் தைரியமாகச் சொல்' என்றான். சீமாட்டி மறுபடியும் தன்

உணர்ச்சியை அடக்கிக்கொண்டு, 'பேசாதே, கொடுமைக்கு மேல் கொடுமையைப்பற்றியே நீ பிரஸ்தாபிக்கிறாய். அதைக் கேட்கும்போதும் பயமாக இருக்கிறது. நீ இங்கேயே சிறிது நேரம் இரு. நான் போய் உனக்குவேண்டிய பணத்தைக் கொண்டு வருகிறேன்' என்று சொன்னதும் அவனும், 'அப்படியானால் போய்ச் சீக்கிரமாக வா. நானும் இதைவிட்டுப் போய்விடுகிறேன்' என்றான். சீமாட்டியும் விரைவில் தனது அறைக்குச் சென்று சத்தம் செய்யாதபடி பெட்டியைத் திறந்து சில நோட்டுகளையும் சிறிது பொன் நாணயங்களையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். ஆனால் மறுபடியும் அவள் தேகம் பூராவும் ஏதோ ஒருவிதமான அச்சத்தால் நடுங்கியது, தொண்டை உலர்ந்துபோனதுபோல் அடைத்துக் கொண்டுவிட்டது. ஆகவே அவள் சோப் நீரால் முகத்தைக் கழுவிக்கொண்டு சிறிது இனிய பானத்தையும் பருகியதும் அங்கிருந்து புறப்பட்டு மெதுவாக அடிமேல் அடிவைத்து யாருக்கும் தெரியாதபடி மடத்தில் பூமிக்குள் இருந்த அறையில் சென்று மகா கொடியோனாகிய ராட்சஸ குப்பன் முன்னிலையில் மீண்டும் நின்றாள்.

அவள் குப்பனிடம், 'இதோ இந்தப் பணத்தை எடுத்துக்கொள். இங்கிருந்து உடனே போய்விடு. நீ மறுபடியும் இங்கே இருப்பாயானால் உன்னைப் போலீசார் கைது செய்ய முயலும்போது அதை நான் எவ்விதத்திலும் தடுக்கமுடியாது' என்றதும் அவன், 'நீ மரியாதையாகவும் திருப்திகரமாகவும் நடந்துகொள்வதால் நான் உனக்குத்தொந்தரை கொடுக்கமாட்டேன். இதோ சீக்கிரத்தில் போய்விடுகிறேன். உன் பின்னாலேயே வந்து இந்த வீடு முழுதையும் கடந்து செல்வதைவிட இதோ இந்த ஆற்றின் பக்கமாக உள்ள ஜன்னல் வழியாகக் குதித்துப் போய்விடுகிறேன். அடிக்கடி இம்

மாதிரியே எனக்கு உதவி செய்துகொண்டிரு' என்று சொல்லி அவளுக்கு வந்தனம் செலுத்திவிட்டு ஒரு ஜன்னல் வழியாக வெளியே குதித்து அவ்விடத்தை விட்டுப்போய் விட்டான். அவன் போனபின்னர் ஹேமவதி சீமாட்டி தன் அறைக்குச் சென்று ஒரு ஆசனத்தில் அமர்ந்து பலவாறு சிந்திக்கலானாள். அப்போது நடந்ததெல்லாம் கனவோ அல்லது நினைவோ என்று சந்தேகித்தாள். அவள் நிதான மாக எல்லா விஷயங்களையும் ஞாபகத்துக்கு கொண்டுவந்து யோசித்துப் பார்த்ததில் குப்பனுடன் அவள் நடத்திய சம் பாஷணைக்காக மிகவும் வருத்தப்பட்டாள். அப்படுபாவியா கிய அவன் கையில் அவள் சிக்கிக்கொண்டுவிட்டதற்காக மிகவும் வருந்தினாள். ஆனால் மற்றும் சொற்ப நேரம் சிந்தித் துப்பார்த்த பின்னர் அவள் சிறிது தைரியத்தை அடைந்த வளாய் 'இல்லை, இல்லை' நான் அவன் கையில் சிக்கிக் கொள்ளவில்லை, கொலையும் களவும் பிறவும் செய்வதில் தேர்ந்த அவன் சொல்வதை நம்பி உலக மக்கள் ஹேமவதி சீமாட்டியும் கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியுமாகிய என் மீது யாரும் எத்தகைய சந்தேகமும் அடையமாட்டார்கள். ஆகை யால் நான் அவனுக்கு அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் இப் போது அவனைச் சந்தித்துப் பேசியதற்காக நான் சந்தோ ஷப்பட வேண்டியதே. ஏனெனின் எனக்கு அவனது உதவி வேண்டியிருக்கும். எனக்கு நாலாபக்கங்களிலும் ஆபத்து சூழ்ந்து கொண்டு வருகிறது. அப்போது நான் தப்பித்துக் கொள்ளும்பொருட்டு அவனது உதவி எனக்குத் தேவை ஆயி னும் ஆ, அவன் எவ்வளவு கொடுமை வாய்ந்தவன். அதை நினைக்கும்போதுதான் பயங்கரமாக இருக்கிறது' என்று நினைத்தாள்

சிற்சில சமயங்களில் அவளுக்குத் தூக்கம் வருவது

போல் தோன்றியதெனினும் அயர்ந்த நித்திரை வரவில்லை. இவ்வாறாக அன்றிரவு கடந்தது. மறுநாள் காலை அம்மாளிகையில் இருந்தவர்களும் அக்கம்பக்கத்தில் வசித்த ஜனங்களும் முன் நாள் இரவு மடத்தில் விளக்கு காணப்பட்டதென்றும் ஏதோ பேய் பிசாசு நிச்சயமாக இருக்கிறதென்றும் பேசிக்கொண்டார்கள். சிலர் பயப்படவும் செய்தார்கள். இதையெல்லாம் கேட்ட ராஜேஸ்வரி அவர்களுடைய மூட நம்பிக்கையைக் கண்டு சிரித்தாள். ஹேமவதி சீமாட்டி அவ்வாறு சிரிக்காமல் அவர்கள் அவ்வாறு பயப்படுவது முட்டாள்தனமென்று கண்டித்தாள். அவள் அவ்வாறு கண்டிப்பதில் ஆச்சர்யமொன்றுமில்லை. ஏனெனின் முன்நாள் இரவு அங்கு விளக்கு வெளிச்சம் காணப்பட்டதற்குக் காரணம் அவளுக்கு நன்கு தெரிந்தது தானே.

56-வது அத்தியாயம்

காதலர்களின் ஓட்டம்.

இப்போது நாம் ஹேமவதி சீமாட்டியின் மற்றொரு குமாரியாகிய கற்பகத்தைக் கவனிப்போம். சீமாட்டி கிருஷ்ண கிரிக்குப் புறப்படுவதற்குச் சிறிது முன் கற்பகம் தன் அந்தரங்க வேலைக்காரியாகிய பார்வதியுடன் ஓடிப் பக்கத்துத் தெருவில் போய்ப் பார்த்ததில் அங்கு ஒரு வாடகை மோட்டார் தயாராக நின்றிருந்தது. கற்பகத்தின் காதலனான துளசிங்கம் பிரபு மிக ஆவலுடன் அவளது வரவை எதிர்பார்த்துக்கொண்டே அந்த மோட்டாரின் அருகில் நின்றிருந்தான். கற்பகம் ஓடிப்போய் அவன் மீது சாய்ந்தாள். இருவரும் பரஸ்பரம் தழுவிக்கொண்டு அதிகம்

பேசாமல் மோட்டாரில் ஏறினர். அவர்கள் பின்னாலேயே பார்வதியும் ஏறிக்கொண்டாள். வண்டியைச் செலுத்தும் படி டிரைவருக்கும் அனுமதி கொடுக்கப்பட்டது. வண்டியும் வாயுவேக மனோவேகமாகப் பறந்தது. இரத்தினபுரி நகரின் தெருக்களையெல்லாம் கடந்தாகிவிட்டது. மற்றும் சில கிராமங்களைத் தாண்டிக்கொண்டு அம்மோட்டார் வெகு தூரத்திலுள்ள ஒரு ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று நின்றது. அப்போது ஒரு ரயிலும் புறப்படத் தயாராக இருந்தது. உடனே மூன்று தனி முதல் வகுப்பு டிக்கெட்டுகள் வாங்கப்பட்டு அவர்கள் மூவரும் ரயிலில் ஏறியதும் கார்டும் சமிக்ஞை செய்ய ரயிலும் புறப்பட்டுவிட்டது.

இவ்வளவையும் அனுபவித்த கற்பகம் அது கனவோ என்று முதலில் சந்தேகப்பட்டாள். தன் தாயின் கொடுமையினின்றும் விலகித் தன்னால் அதிகம் காதலிக்கப்பட்டவனும் நேசிக்கப்பட்டவனுமான ஒருவன் பக்கத்தில் எதிர்பாராதவிதமாய் உட்கார்ந்துகொண்டு ரயிலில் பிரயாணம் செய்வதென்றால் அவளது மனம் அதிக சந்தோஷப்பட்டது. தான் விரும்பிய ஒருவருடன் ஓடிப்போவதற்காக அவள் உற்றார் உறவினர் ஊரார் என்ன சொல்வார்கள் என்பதையும் பொருட்படுத்தாமல் வீட்டை விட்டு வெளியேறியதை நினைத்தபோது அவளுக்கே ஆச்சர்யமாக இருந்தது. இவ்வளவும் இராக்காலங்களில் கனவில் நடக்குமேயொழிய பகலில் நிச்சயமாக நடப்பது முடியக்கூடிய காரியமா என்று நினைத்தாள், ஆனால் உண்மையில் அப்படித்தானே நடந்திருக்கிறது. ஆகவே அவள் தன் மனமார்ந்த காதலனை துளசிங்கம் பிரபுவின் மடியில் வீழ்ந்து சந்தோஷத்தின் மிகுதியால் ஆனந்த பாஷ்பம் சொரிந்தாள். துளசிங்கமும் தன் காதலியைப் பெற்றுவிட்டதற்காக அளவிலா சந்தோஷ

மடைந்து அவளது கன்னத்தில் பல இனிய முத்தங்களைத் தந்தான். பரஸ்பரம் அவர்கள் முத்தமிட்டுக்கொண்ட சப்தம் அவர்களுடனேயே உட்கார்ந்திருந்த பார்வதியின் காதில் விழுந்ததென்றாலும் அவள் ஒன்றும் தெரியாதவள் போலும் அப்போதுதான் ரயிலுக்கு வெளியில் காணப்படும் வேடிக்கைகளை அதிக கவனத்துடன் பார்ப்பவள் போலும் ஜன்னல் வழியாக வெளியில் தலையை நீட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருந்தாள்.

இவ்வாறு காதலர் இருவரும் தழுவிக்கொள்வதாலும் முத்தமிடுவதாலும் தங்கள் ஆசையைத் தீர்த்துக்கொண்ட பின்னர் துளசிங்கம் செய்திருக்கும் ஏற்பாடு முதலியவற்றை கற்பகம் விசாரித்தாள். தங்கள் முயற்சி வெற்றியடையும் என்று பூரணமாக நம்பியிருந்த துளசிங்கம் உடனே பரிதிபுரம் போய்விடுவதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டிருந்தான். மூவருக்கும் பிரயாண அனுமதிச் சீட்டும், அவர்களுக்கு வேண்டிய சாமான்களும் தயாராக வைக்கப் பட்டிருந்தன. பரிதிபுரத்துக்குச் சென்றதும் இரத்தினபுரி புரோகிதர் மூலம் விவாகம் முடித்துக்கொண்டுவிட வேண்டியதுதான். இந்த சமாசாரத்தை அவன் அவளிடம் கூறிய போது அவள் ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் இரத்தினபுரி புரோகிதர் மூலம் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று சொன்னபோது மட்டும், அவன் சுமார் ஐந்து வருஷங்களுக்கு முன் மற்றொரு மாதை அங்கேயே கலியாணம் செய்துகொண்டதும், அப்பெண் இன்னும் உயிருடன் இருப்பதும் அவளுக்கு ஞாபகம் வந்ததால் அவளது முகம் சிறிது வாட்டமடைந்தது. இதை ஒருவாறு அறிந்துகொண்ட துளசிங்கம் பிரபு தனது காதலியான கற்பகத்துக்குத் தக்க சமாதானம் கூறிச் சாந்தப்படுத்தினான்.

அப்போது அவன் கூறியதாவது, 'நான் முதலில் மணந்து கொண்ட மாது என் பங்குக்கு இறந்துவிட்டாள் என்றே கூறவேண்டும். அவள் நான் அவளுடைய கணவன் என்று சொல்லவே மாட்டாள். எங்களுடைய ஒற்றுமையை அவள் ஒருகாலும் கெடுக்க மாட்டாள். அதற்காக நாம் பயப்பட வேண்டியதில்லை. மேலும் பரிதிபுரத்தில் நாம் கலியாணம் செய்து கொண்டதும் வேறு அன்னிய தேசம் போய்ப் பலகாலம்வரை இரத்தினபுரிக்கு வரமாட்டோம். ஆகையால் நாம் அஞ்சவேண்டியதில்லை.'

இதைக் கேட்டதும் கற்பகத்தின் கண்களினின்றும் நீர் சொரிந்தது. பரிதிபுரத்தில் கலியாணம் செய்துகொள்ள முயற்சிக்கும்போது ஏதேனும் தடங்கல் ஏற்படலாமென அஞ்சினள். இரண்டாவதாகத் தன்னிடம் அதிக அபிமான முடைய மூத்த சகோதரி ராஜேஸ்வரியை விட்டு அவ்வளவு காலம் பிரிந்திருக்க வேண்டுமே என்னும் எண்ணம் அவளுக்கு வருத்தத்தை அளித்தது. அவள் தன் சகோதரன் தினகரனுக்காகவோ அல்லது தாயார் ஹேமவதிக்காகவோ வருத்தப்படவில்லை. ராஜேஸ்வரியினிடமிருந்து பிரிவது மட்டும் கஷ்டமாய் இருந்ததால் அவளது கண்களிலிருந்து நீர் சொரிந்தது. அதைக்கண்ட துளசிங்கம் பிரபு அவளை வாரி அணைத்து முத்தமிட்டு அக்கண்ணீரைத் துடைத்தான். அதனால் ஆறுதலடைந்த கற்பகம் அவன் மடிமீது சாய்ந்து, 'நான் கண்ணீர் விட்டதற்காக மன்னிக்க வேண்டும். நான் இப்போது செய்துவிட்ட காரியம் தவறு என்பதற்காக அப்படி வருந்தவில்லை. இதுதான் கடவுள் ஏற்பாடு என்று நான் இதை மனத்திருப்தியுடன் ஏற்கிறேன்' என்றாள். இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பகல் ஒரு மணி சுமாருக்கு அந்த ரயிலும் துறைமுக நகரமான நாக

புரிக்கு வந்து சேர்ந்தது. அவர்கள் இரத்தினபுரியிலிருந்து ஓடியபின்னர் அங்கு என்ன நடந்தது என்பது அவர்களுக்குத் தெரியாது. ஹேமவதி சீமாட்டி சொற்பகோத்துக் கெல்லாம் பைத்தியக்காரியைப்போல் தன் மகள் ராஜேஸ்வரியுடன் கிருஷ்ணகிரிக்குப் போய்விட்டாள் என்பதையும் அவர்கள் அறியமாட்டார்கள். அவர்கள் அப்பக்கமாகச் செல்வார்கள் என்று அறிந்து பின் தொடரலாம் என்பதை துளசிங்கம் உணர்ந்தும் வேறு விதியில்லாமல் அவன் தன் காதலியுடன் அதே வழி போக வேண்டியதாயிற்று. குறிப்பிட்ட தினத்தில் அவன் பரிதிபுரம் சென்று உத்தியோகத்தை ஒப்புக்கொள்ளவேண்டியிருந்ததால் வேறு வழி போய்ப் பிறகு அங்கு சேரச் சாவகாசமில்லை.

நாகபுரியை அடைந்த அவர்கள் முதல்தரமான ஓட்டல்களில் தங்கினால் பின் தொடருபவர்கள் எளிதில் கண்டுபிடித்து விடுவார்களாதலால் மறுநாள் காலை கப்பல் புறப்படும் வரை அங்கு ஏதேனும் எளிய, பாமர மக்கள் தங்கும் ஓட்டலில் தங்க முயற்சித்து விசாரித்ததில் முக்கிய தெருக்களில் ஒன்றில் இருந்த முருகேசனுடைய ஓட்டல்தான் தகுதியான இடம் என்று தெரிந்துகொண்டார்கள். ஆகவே அம் மூவரும் அங்கு போய்ச் சேர்ந்தனர். அவர்கள் யார் என்றே நாகபுரியில் யாருக்கும் தெரியாது. அவர்களுடைய பெட்டியின்மீதும் பெயர்கள் எதுவும் எழுதப்படவில்லை. ஓட்டலிலும் அவர்கள் வெவ்வேறு பெயர்களை வைத்துக்கொண்டு ஒருவருக் கொருவர் சம்பந்த மில்லாதவர்களைப்போலும் ஆனால் ஒரே இடத்திலிருந்து ஒரே இடத்துக்குப் போகிறவர்கள்போலும் நடந்துகொண்டனர். பார்வதியும் கற்பகத்தின் வேலைக்காரிபோல் பாவிக்கப்படாமல் ஒரு சினேகிதையைப்போல் நடத்தப்பட்டாள்.

முருகேசனுடைய ஓட்டலுக்குள் சென்றதும் அவர்களுக்கென மாடியில் ஒரு அறை தனியாகக் கொடுக்கப்பட்டது. கற்பகமும் பார்வதியும் முகத்தைக் கழுவிக் கொண்டனர். துளசிங்கம் பிரபுவும் பிரயாணத்தின் களைப்பைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஸ்நானம் செய்தான். பிறகு அவன் ஓட்டல் சொந்தக்காரனான முருகேசனைத் தனியே அழைத்துத் தன்னுடன் வந்திருக்கும் பெண்களில் ஒருத்தி பரிதிபுரம்போய்ச் சேர்ந்ததும் தன்னைக் கலியாணம் செய்து கொள்ளப் போவதாகவும், யாரேனும் தங்களைப்பற்றி அநாவசியமாக விசாரித்தால் முருகேசன் அதற்கெல்லாம் இடங்கொடுக்கக் கூடாதென்றும் தெரிவித்துவிட்டான். முருகேசனும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டான். அப்போது துளசிங்கம் அவனுக்குச் சன்மானமாக ஐந்து பவுன்களைக் கொடுத்தான். பிறகு மாடிக்கு ஆகாரம் அனுப்பும்படி சொல்லிவிட்டு அவன்போய் அறையில் இரு பெண்களுடன் உட்கார்ந்துகொண்டான்.

முருகேசனுடைய மூத்த குமாரியாகிய கமலவதி மாடியின் கடைசி அடுக்கிலிருந்து இறங்கித் தன் தகப்பனார் இருக்கும் இடத்துக்கு வந்தாள். அங்கே தனது பெற்றோர்களும் சகோதரிகளும் கூடிக்கொண்டு அப்போதுதான் அவர்களுடைய ஓட்டலுக்கு வந்த விருந்தினரைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அதையெல்லாம் கேட்டறிந்த கமலவதி, தன் ஓட்டலுக்கு வந்திருக்கும் அம் மூவரும் மிக நல்லவர்களென்றும் அவர்களில் இருவர் பரஸ்பரம் தம்பதிகளாகப் போகின்றனர் என்றும் தெரிந்துகொண்டாள். விருந்தினருக்கும் ஓட்டல் சொந்தக்காரர்களுக்கும் பரஸ்பரம் அபிமானம் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் அங்கு கூடிக்கொண்டு பேசிக்கொண்டிருக்கையில் நடுத்தர வயதைக் கடந்தவனும், சிறிது

உயரமானவனும், பெரிய மனிதனைப்போல் காணப்பட்டவனுமான ஒருவன் அங்கே வந்து முருகேசனைத் தனியே கண்டு பேச விரும்பினான். அவன் பெயர் பச்சையப்பர். அவன் தனது மனைவியுடனும் மற்றொரு பெண்ணுடனும் அங்கு வெயிற்காலங்களில் தங்குவது வழக்கம். அவன் மேற்பார்வைக்கு நல்லவன்போல் தோன்றினாலும் அவனது முகத்தை நன்கு பார்த்தால் அவன் சூழ்ச்சியும் வஞ்சனையும் மிக்கவன் என்பது நன்றாகத் தெரியும். அவன் அந்நகரில் இருக்கிறான் என்பது முருகேசனுக்குத் தெரியுமென்றாலும் அவன் அதுவரை அந்த ஒட்டலில் வந்ததில்லை. ஆகவே பச்சையப்பதன் கட்டடத்தில் வந்து தன்னுடன் தனியாகப் பேசவேண்டுமென்று அவசரமாக அழைத்ததும் முருகேசன் ஆச்சர்யப்பட்டு அவனது வேண்டுதலுக் கிணங்கத் தனியறையில் அவனை அழைத்துச் சென்று விஷய மென்னவென்று விசாரித்தான்.

பச்சையப்பர் முருகேசனிடம் சொற்பநேரத்துக்குமுன்னர் இருமாதர்களுடன் அவனுடைய ஒட்டலில் வந்து தங்கிய கனவான் யாரென்று அவனுக்குத் தெரியுமா என விசாரித்தான். அதற்கு முருகேசன், ‘அவர்கள் என் ஒட்டலுக்கு வந்த விருந்தாளிகளென்பதைமட்டும் நான் அறிவேனேயொழிய மற்றப்படி அவர்களைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது’ என்றான். அதற்கு பச்சையப்பர், ‘அவர்கள் இங்கே வரும்போது அதிக சாமான்களுடன் வந்ததை நான் பார்த்தேன். அம்மாது அந்தக் கனவானுடன் போகவேண்டிய அவசியமென்ன என்று எனக்குத் தெரியவேண்டும்’ என்றான். அப்போது முருகேசன், ‘ஐயா, தயவு செய்து என் ஒட்டலில் தங்கி யிருப்பவர்கள் விஷயத்தில் அநாவசியமாகத் தலையிடவேண்டாம். இதனால் நான் அவர்களுக்கு உளவாக இருப்பதாகவும் நீ கருதலாகாது’ என்றதும் பச்சையர், ‘உன்

ளுல் எனக்கு ஒருவேலை ஆகவேண்டியிருக்கிறது. அதைச் செய்து கொடுப்பாயானுல் உனக்குத் தக்க சன்மானம் அளிப்பேன்' என்று கூறிக்கொண்டே அவனது பணப்பையைக் கையிலெடுத்து வைத்துக்கொண்டு அதிக அன்புடையவனைப் போல் பேசினுன். துளசிங்கம் பிரபுவினிடமிருந்து ஐந்து பவுன் சன்மானம் பெற்றுக்கொண்ட முருகேசன் பச்சையப்பரிடம்மட்டும், 'ஐயா, நான் சன்மானத்தைப் பெற்று இன்னெருவருக்கு வேலை செய்யும் வழக்கமில்லை' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான்.

அதைக்கண்ட பச்சையப்பர் என்ன செய்வதென்று யோசித்து உடனே தன் பெயர் அடங்கிய கார்டு ஒன்றை அவனிடம் கொடுத்து, 'இதை துளசிங்கம் பிரபுவினிடம் கொடுத்து அவனை நான் உடனே சந்தித்துப்பேச விரும்புவதாகத் தெரிவி. அவன் தன் பெயர் என்னவென்று சொல்லிக்கொண்டிருந்தபோதிலும் நான் இப்போது தெரிவித்ததுதான் அவன் பெயர். அவனுடைய நன்மையைத் தேடியே நான் இங்கு வந்திருக்கிறேன்' என்று சொன்னுன். அப்போது முருகேசன் அக்கடிதத்தைத் துளசிங்கம் பிரபுவினிடம் எடுத்துச் செல்லலாமா கூடாதா என்பதுபற்றிச் சிறிதுநேரம் யோசித்துவிட்டு இறுதியில் அவனுடைய நன்மைக்காகவே என்று சொல்வதால் எடுத்துச் செல்வதே நலமென்று நினைத்து அக் கடிதத்துடன் புறப்பட்டான். அவனது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவன் மனைவி மக்களிடம் தனக்கும் பச்சையப்பருக்குமிடையில் நடந்த விஷயங்களையெல்லாம் சொன்னுன். கடைசியில் அக்கடிதத்தை முருகேசனுடைய குமாரியான கமலவதி எடுத்துச் சென்று துளசிங்கம் பிரபுவினிடம் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆகவே அவள் அக் கடிதத்

துடன் மாடிமீது ஏறித் துளசிங்கம் பிரபு, கற்பகம், பார்வதி ஆகிய மூவரும் இருந்த அறைக்குச் சென்றாள்.

கமலவதி அவ்வறையில் நுழைந்ததும் உள்பக்கம் கதவைச் சாத்திக்கொண்டு துளசிங்கம் பிரபுவினிடம், 'ஐயா, கீழே யாரோ ஒருவர் வந்திருக்கிறார். அவர் உங்களுக்குத் தெரிந்தவர் என்று சொல்லிக் கொள்கிறார். இதோ இக்கடிதத்தைக் கொடுத்திருக்கிறார். இஷ்டமானால் இதைப் பாருங்கள்,' என்று தெரிவித்து அக்கடிதத்தையும் கொடுத்தாள். துளசிங்கமும் அந்தக் கார்டைப் பெற்று அதிலிருந்த பெயரைக் கண்டதும் பீதியுடன் முகம் வெளுத்தவனாய்க் கமலவதியைப் பார்த்து, 'கீழே வந்திருக்கும் இந்த மனிதன் உங்களை வேறு ஏதேனும் கேள்வி கேட்டானா? உண்மையை மறைக்காமல் சொல்' என்று பரபரப்புடன் கேட்டான். அப்போது அவனுடைய காதலியான கற்பகமும் தன் காதலன் அக்கடிதத்தைக் கண்டதும் அவ்வளவு பீதியடைவானேன் என்று கவலையுடன் அவனது முகத்தையே பார்த்தாள். கமலவதியும் தன் தகப்பனுக்கும் பச்சையப்பர் என்னும் அந்த ஆளுக்குமிடையில் நடந்த சம்பாஷணையை ஒரு எழுத்தும் விடாமல் அப்படியே சொன்னாள். பச்சையப்பர் சன்மானம் கொடுக்க விரும்பியபோது தன் தந்தை மறுத்ததை முக்கியமாகச் சொன்னாள். ஏனெனின் புதிதாக வந்து தங்கள் ஓட்டலில் தங்கியிருப்பவர்களுக்கு அக்குடும்பத்தார் உண்மையுடன் நடந்துகொள்கிறார்கள் என்பதை ருஜுப்பிக்க வேண்டுமென்பது அவளது கருத்து.

இதைக்கேட்டபின்னர் துளசிங்கம் கமலவதியிடம், 'கீழே காத்திருக்கும் அந்த ஆளை இந்த அறைக்குள் அனுப்பு,' என்றதும் கமலவதியும் அவ்வறையைவிட்டு வெளியே சென்றாள். உடனே துளசிங்கம் பிரபு தன் காத

வியை அணைத்துக்கொண்டவண்ணம், 'காதலியே, இப்போது நீ உனக்கு ஒருவிதமான உணர்ச்சியைத் தரக்கூடிய வேடிக்கையைப் பார்க்கப் போகிறாய். ஆனாலும் என் இறந்த கால வாழ்க்கையை யெல்லாம் நீ நன்கு அறிவாயாதலால் இனி நீ தெரிந்துகொள்ளவேண்டியது ஒன்றுமில்லை. ஆனால் என் விவாகத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்மட்டும்தான் உனக்குத் தெரியாது. ஆகையால், தைரியமாக இரு. இனி நம்மைப் பிரிக்கக்கூடிய சக்தி இவ்வுலகில் எதுவுமே இல்லை என்று நிச்சயமாகக் கூறுகிறேன். நீதான் உறுதியான மனத்துடன் இருக்கவேண்டும்' என்றான். அதைக் கேட்டதும் சந்தோஷமடைந்த கற்பகம், 'காதல, நீ இவ்வாறு உறுதி கூறுவதைக் காண நான் அளவிலாச் சந்தோஷமடைகிறேன்' என்று கூறினாள்.

அப்போது அவன், 'நீ நமது பார்வதியின் அருகில் உட்கார்ந்துகொண்டு இப்போது இங்கு நடக்கப்போகிறதை இருவருமாகப் பார்த்துக்கொண்டிருங்கள். நடக்கப் போவதெல்லாம் உனக்கு தெரிந்த விஷயம்தான் என்று பார்வதியிடம் சொல்' என்றதும் கற்பகம் தன் காதலனுடைய கையை ஆர்வத்துடன் அழுத்திவிட்டு அந்த அறையின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குப் போய் அங்கு தனியே உட்கார்ந்துகொண்டிருந்த பார்வதியுடன் கலந்துகொண்டாள். அந்தக்ஷணமே அவ்வறையின் கதவும் திறக்கப்பட்டது. பச்சையப்பர் உள்ளே வந்தான். அவன் உள்ளே வந்ததும் அவன் தனக்கும் தெரிந்தவனாக இருக்கலாமோ என்னும் எண்ணத்துடன் கற்பகம் அவனை உற்றுநோக்கினாள். ஆனால் அவளுக்கு அவன் முன்பின் தெரியாத ஒரு புது மனிதனாகவே இருந்தான். பிறகு அவள் தன் காதலன் துளசிங்கம் பிரபு என்ன செய்கிறான் என்று கவனித்தாள். அவன்

பச்சையப்பர் என்று சொல்லப்பட்ட அப்புதிய மனிதன் வந்ததும் மிக மரியாதையாக எழுந்து நின்று வணக்கத்துடன் வரவேற்றான். பச்சையப்பரை அவ்வறைக்கு அழைத்து வந்த கமலவதி அறையின் கதவைப் பழையபடி சாத்திக்கொண்டு போய்விட்டாள் என்பதை அறிந்த பச்சையப்பர் துளசிங்கத்தினிடம், 'நான் உன்னுடன் சில விஷயங்களைத் தனியாகப் பேசவேண்டும்' என்றான். அதற்குத் துளசிங்கம், 'ஐயா, பச்சையப்பரே! அது முடியாது. நீ என்னதான் பேசுவதாயிருந்தாலும் இங்கே நாங்கள் மூவரும் இருக்கும்போதுதான் கூறவேண்டும்,' என்று சொன்னான். அச்சமயம் பச்சையப்பர் அதே அறையின் மற்றொரு மூலையில் இருந்துகொண்டு இவர்களுடைய சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்த கற்பகத்தையும், பார்வதியையும் பார்த்துக்கொண்டே. 'துளசிங்கம்! நீ கூறுவது உண்மையாகவே பேசுகிறாய் என்று நினைப்பதற்கில்லை' என்றதும் துளசிங்கம், 'இல்லை, இல்லை. நான் உண்மையையே சொன்னேன். நீ எதையும் எங்கள் மூவருடைய எதிரிலேயே சொல்லவேண்டும்' என்று உறுதியுடன் கூறினான்.

இதனால் ஆச்சர்யமடைந்த பச்சையப்பர், 'ஓ, அப்படியானால் இம்மாது உன்னுடன் எவ்வித சம்பந்தத்துடன் வந்திருக்கிறாள் என்பதில் நான் யூகித்தது தவறாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்' என்று கூறியதும் துளசிங்கம், 'ஐயா, நீ அம்மாதைப்பற்றிக் கண்ணியக் குறைவாக நினைத்திருந்தாலோ அது தவறு என்று நான் கண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தவறான எண்ணத்தை நீ உடனே மாற்றிக்கொண்டுவிடவேண்டும்' என்று திடபுத்தியுடன் கூறினான். அப்போதும் ஏதேனும் ஆத்திரத்தை உண்டாக்க வேண்டுமென்று நினைத்த அந்த பச்சையப்பர், 'அப்படியா

ஞல் நான் நினைத்ததுபோலவே அம்மாது உன்னைக் கலியாணம் செய்து கொண்டு சீமாட்டி என்னும் பட்டம் பெறலாமென்னும் ஆசையுடன் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக ஓடி வருகிறுள்போலும்' என்றதும் துளசிங்கம், 'ஆம்; அதில் என்ன தவறு இருக்கிறது? நாங்கள் பரிதிபுரம் சென்றதும் இருவரும் மணந்துகொள்வது நிச்சயம். நீ அதைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை' என்றுன். அப்போது பச்சையப்பர், 'அப்படியா? ஒரு பெண்ணை அநியாயமாய் ஏமாற்றி விடலாமா? உன்னுடைய உண்மையான நிலைமையை அப்பெண் அறிந்துகொண்டிருக்கிறுளா? அல்லது நீ அவளை ஏமாற்றுகிருயோ என்பது எனக்குத் தெரியவேண்டும்' என்றுன்.

அப்போது துளசிங்கம் பிரபு அத்தகைய மிரட்டல்களுக்கெல்லாம் சிறிதும் லட்சியம் செய்யாதவனைப்போல், 'ஐயா, அவளுக்கு எல்லா விஷயங்களும் விவரமாகத் தெரியும். நீயே வேண்டுமாயினும் அவள் வாய்மூலமே எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நான் ஒன்றும் மறைத்துவைக்கவில்லை. உள்ளதை உள்ளபடி கூறியிருக்கிறேன்' என்றதும் பச்சையப்பர் கற்பகத்தினிடமாகத் திரும்பி, 'மாதே, கலியாணமான ஒருவனை நீ மணந்துகொள்ளப்போகிருய் என்பது உனக்குத் தெரியுமா? அதனுல் உனக்குச் சீமாட்டி என்னும் பட்டம் முதலியன ஒன்றும் கிடைக்காது. மேலும் உன் காதலன்மீதும் பல மாதரைக் கெடுத்த குற்றம் சுமத்தப்படும்' என்றுன். இந்த விஷயம் பூராவும் கற்பகத்துக்குத் தெரிந்ததேயென்றுலும் உத்தமியாகிய அவளது மனம் சிறிது வருத்தத்தையே அடைந்தது. ஆயினும் இச்சந்தர்ப்பத்தில் எதற்கும் அஞ்சுபவள்போல் இருக்கக்கூடாதென்னும் எண்ணத்துடன் பச்சையப்பரிடம், 'ஐயா, நீர்

இது சம்பந்தமாக என்னிடம் ஒன்றும் பேசவேண்டியதில்லை. எனக்கு முன்பின் தெரியாத புதிய மனிதராகிய நீர் என் காரியங்களில் தலையிடலாகாது' என்று கண்டிப்பான முறையில் கூறிவிட்டாள். அப்போது பச்சையப்பர் மீண்டும் துளசிங்கத்தைப்பார்த்து, 'ஓ! இந்த விஷயம் இன்னும் முற்றிப் போகும்படி விடமுடியாது. உனக்கு முன்னமே கலியாணமாகி இருக்கிறது. உன் மனைவியும் பிழைத்திருக்கிறாள். அது சம்பந்தமான தஸ்தாவேஜ்களெல்லாம் நேற்றுதான் எனக்கும் கிடைத்தன. அப்பெண்ணும் ஜீவனும்சம் பெற்று வருகிறாள். இதையெல்லாம் நீ மறுக்கமுடியுமா? இதற்கு இப்போது என்ன சொல்லப்போகிறாய்!' என்று அதிகார தோரணையில் கேட்டான்.

அப்போது துளசிங்கம் பிரபு நிதானமாக, ஐயா, இப்போது நீ கூறியதை யெல்லாம் நான் மறுக்கவில்லை. சென்ற சில தினங்களுக்கு முன்னர் நான் அப்பெண்ணையே இரத்தினபுரியில் சந்தித்தேன். ஐந்து வருஷங்களுக்கு முன் எங்களிடையே ஏற்பட்ட விவாகத்தை அவளும் மதியாததால்தான் அது சம்பந்தமான எல்லா ரிகார்டுகளையும் என்னிடமே திருப்பிக்கொடுத்து விட்டதுடன் இனி எனக்கும் அவளுக்கும் சம்பந்தமில்லை யென்றும், நான் என் இஷ்டப்படி நடந்து கொள்ளலாமென்றும் கூறி விட்டாள். அவளும் சுதந்தரமாக இருக்கவேண்டு மென்பதே அவளது அபிப்பிராயம்' என்று விவரமாகத் தெரிவித்ததும் பச்சையப்பர் திக்பிரமை யடைந்து, 'ஓ, அப்படியா செய்து விட்டாள்' என்று கூறிக்கொண்டே அதிக கோபத்துடன், 'இல்லை, அப்படி இருக்க முடியாது. நீ சொல்வதை நான் நம்பவில்லை. ஏதோ தவறான வழியில் நீ இந்த ரிகார்டுகளைப் பெற்றிருக்கிறாய். அல்லது பொய்ப் பத்திரங்களை நீ சிருஷ்டித்திருக்க

வேண்டும். எப்படியாவது கற்பகத்தை ஏமாற்ற நீ இவ்வாறு சூழ்ச்சிகள் செய்திருப்பாய்' என்றான். அதனால் அதிக ஆத்திரமும் கோபமும் அடைந்த துளசிங்கம் பிரபு, 'ஐயா, மற்றொருமுறை அவ்வாறு தைரியமாக என் எதிரில் பேச வேண்டாம். உடனே மரியாதையாக வெளியே போய்விடு. இல்லாவிட்டால் பெருத்த சண்டை ஏற்படும்' என்றான். அப்போதும் பச்சையப்பர் அவ்விடத்தை விட்டுப் போகாமல், 'சரி, கடைசியாக ஒரு வார்த்தை. கலியாண சம்பந்தமான ரிகார்டுகளை யெல்லாம் நீ வைத்துக் கொண்டிருந்த போதிலும் நடந்த கலியாணம் நடந்ததுதானே. அதை இல்லையென்று சொல்லிவிட முடியுமா? பரிதிபுரத்திலுள்ள இரத்தினபுரி புரோகிதர் முன்னிலையில்தானே நடைபெற்றது. அவரிடத்தில் ஒரு பத்திரம் இருக்கிறதல்லவா! ஆகவே அக் கலியாணம் ரத்தாய் விடாது. எனவே நான் நீங்கள் போகுமிடங்களுக்கெல்லாம் வந்து உங்கள் கலியாணம் நிறைவேறாதபடி செய்வேன். ஆ! இப்போது நீ பயந்து விட்டாய். நீ எதிர்பார்த்ததைவிட இது மிகச் சிக்கலான வேலை என்பதை இப்போதுதான் தெரிந்து கொண்டாய் போலும்' என்று கூறினான்.

அப்போது அதிக வருத்தமும் மனக்கவலையும் அடைந்த கற்பகம் தன் இருகரங்களையும் கூப்பிய வண்ணம் பச்சையப்பர் எதிரில் வந்து நின்று, 'ஐயா, நீர் ஏன் அநாவசியமாக இவ்வாறு எங்கள் இன்பத்தில் தலையிடுகிறீர்கள். எங்கள் இன்பத்தைக் கெடுப்பதில் இவ்வளவு இரக்க மற்றவராக இருக்க வேண்டாமென்று உங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். எனது காதலனான துளசிங்கம் பிரபுவே! நீங்களும் அவரைக் கேட்டுக் கொள்ளுங்கள்' என்று கூறிக் கொண்டே அவள் துளசிங்கம் கழுத்தில் அவளது கையைப்

போட்டு அணைத்துக்கொண்டு கண்ணீர் சொரிந்தாள். அப்போது துளசிங்கம், 'இல்லை, இல்லை. நான் கேட்டுக்கொள்ளவே மாட்டேன். பச்சையப்பர் அநாவசியமாக இவ்விஷயத்தில் வம்புக்கிழுப்பானுனால் உலகத்துக்கும் நீதிஸ்தலத்துக்கும் அவன் பதில் சொல்ல வேண்டும். பார்த்துக் கொள்வோம்' என்று தைரியத்துடனும் உறுதியுடனும் கூறினுன். அப்போது பச்சையப்பர், 'பிரபுவே! நீ வெளியிட மாட்டேன் என்று வாக்குறுதி செய்திருக்கும் இரகசியத்தை வெளியிடப்போகும் தருவாயில் இருக்கிருய் என்பதை உணர்ந்து பேசு'• என்றதும் இந்த விவகாரத்தில் தனக்குத் தெரியாத இரகசியம் இன்னும் எதுவோ இருக்கிறதென்று கருதிய கற்பகம் பரபரப்புடன், 'எனது காதல! இரகசியமா!' என்று பீதியுடன் துளசிங்கத்தைக் கேட்டாள்! அதற்கு அவன், 'எனது அன்புள்ள காதலியே! வேறு பிரமாதமான இரகசியமொன்றுமில்லை. எனது விவகாரத்தில் ஈடுபட்டவர்களின் பெயரைப்பற்றி அவன் பிரஸ்தாபிக்கிறுன். அப்பெயர்களை நான் கூற முடியாதென்றும், அவ்வாறு வாக்களித் திருப்பதாகவும் நான் முன்னமே உன்னிடம் கூறியிருக்கிறேன் அல்லவா?' என்று கூறித் தன் காதலியைச் சமாதானப்படுத்தி விட்டுப் பச்சையப்பரிடமும், 'ஐயா! அந்தப் பெயரை நான் எவரிடமும் சொன்னதில்லை. இனியும் சொல்ல மாட்டேன் என்று கூறுகிறேன்' என்றுன்.

தான் நினைத்தபடி வெற்றியடைய முடியாமற் போனதால் அதிக ஆத்திரமும் கோபமும் அடைந்த பச்சையப்பர், 'நீ வேண்டுமாயின் பெயர்களையும் சொல்லிக் கொள்ளலாம். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் எப்படியாவது இந்த உன்னுடைய இரண்டாவது கலியாணத்தை மட்டும் தடைப்படுத்தி விடுவேன் என்பது நிச்சயம். கடவுள் சாட்சி

யாக இதைக் கூறுகிறேன்' என்று கூறிக்கொண்டே அவ் வறையை விட்டுச் சென்றான். ஆத்திரத்துடன் அறையின் கதவைத் திறந்தபோது அதுவரை அதன் பின்னால் இருந்த யாரோ ஒருவர் திடீரென்று ஓடியதுபோல் தெரிந்ததால் திக் பிரமையுடன் நின்று 'ஓ; இங்கு உளவர்கள் சிலரும் இருப் பதாகத் தெரிகிறது' என்றான். அதைக் கேட்ட துளசிங்க மும் திக்பிரமை யடைந்து, 'உளவர்களா! அப்படி யாரேனும இருந்தால் அது உன் ஆட்களாகத்தான் இருக்க வேண்டும்' என்றான். பச்சையப்பர் ஒரு வார்த்தையும் பேசாமல் அவ் வறையை விட்டுச் சென்று கீழ்க்கட்டிலிருந்த ஓட்டல் சொந் தக்காரனை முருகேசனிடம் அதிக கோபத்துடன் 'உன் மாளிகையில் தங்கும் ஜனங்களின் இரகசியத்தை அறிய உன் குமாரிகளை ஏவுகின்றாய் போலும்! நல்ல யோக்கியதை தான்' என்று சொல்லிக்கொண்டே அவ்வீட்டை விட்டுப் போய்விட்டான். முருகேசனும் எத்தகைய பதிலும் சொல் லாமல் சும்மா இருந்து விட்டான்.

——:(0):——

57-வது அத்தியாயம்

——:(o):——

கடிதமும் அதன் பதிலும்

துளசிங்கம் பிரபுவும் பச்சையப்பரும் மாடிமீது அறையில் பேசிக்கொண்டிருந்தபோது முரு கேசனுடைய மூத்த குமாரியான கமலவதி கதவுக்குப் பின் னால் நின்றுகொண்டு அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந் தது உண்மையே. அவள் தான் பச்சையப்பர் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தபோது அங்கிருந்து ஓடி யது. என்ன நடக்கிறதென்று தெரிந்துகொள்ளவேண்டு மென்னும் தவறான புத்தியால் அவள் அவ்வாறு கேட்க

வில்லை. பச்சையப்பர் தான் அங்கு வந்தது துளசிங்கத்தினுடைய நன்மைக்கே என்று சொன்னானென்றாலும் கூர்ந்த அறிவுடைய கமலவதி அது உண்மை யென்று நினைக்கவில்லை. ஏதோ விசேஷமிருக்கிறதென்று நினைத்ததால்தான் அவள் அவ்வாறு கவனித்தாள். மேலும் காதலர்களான துளசிங்கம், கற்பகம் ஆகியோரை அவள் உண்மையில் நேசித்ததால் அவர்களுடைய முயற்சியில் எத்தகைய தடங்கலும் ஏற்படக் கூடாதென்று கருதி அப்படிப்பட்ட தடை ஏதேனும் பச்சையப்பர் சந்திப்பால் விளையுமோ? என்று அஞ்சியே கமலவதி அவ்வாறு ஒதுங்கியிருந்து உள்ளே நடந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தாள். துளசிங்கமும் பச்சையப்பரும் பேசியதைக்கேட்ட அவள், தனக்கு முன்பே தெரிந்திருந்த சில விஷயம் இன்னதாகத்தான் இருக்கவேண்டுமென்று தெரிந்துகொண்டுவிட்டாள். ஆகவே அவள் பூராவும் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவலால் அங்கேயே கடைசிவரை இருந்துகேட்டாள். பச்சையப்பர் திடீரென்று கதவைத் திறந்துகொண்டு வந்ததும் அவள் மிரண்ட மானைப் போல் துள்ளிக் குதித்து மேல் மாடியிலுள்ள தன் அறைக்குப் போய்விட்டாள், பச்சையப்பர் உளவாளர் என்று கத்தியதையும்கூட அவள் பொருட்படுத்தவில்லை.

மாடியின் கடைசி அடுக்கிலுள்ள அறையில் கமலவதி உட்கார்ந்திருக்கும் விதத்தை நமது வாசகர்கள் முன்னமே அறிவார்கள். அந்த அறை அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு பெரிய கடிகாரம் தொங்கிக்கொண்டிருந்தது. அவ்வறையின் கூரையில் சுமார் ஒரு சதுர அடி விஸ்தீரணமுள்ள துவாரமொன்று இருந்தது. அது ஒரு பலகையால் மூடப்பட்டு அதனடியில் ஒருமணி கட்டப்பட்டு மணியை அசைக்கும் பிடியொன்று பலகையின் மீது ஏற்

படுத்தப்பட்டிருந்தது. அவள் மிக அழகிய புறுக்களை வளர்த்து வந்தாள். கமலவதி அவ்வறையில் நுழைந்ததும் தன் மேஜையின் அருகில் உட்கார்ந்து அவசரமாக ஒரு கடிதம் எழுதினாள். ஆனால் அது ஒருவித இரகசிய பாஷையில் எழுதப்பட்டது. அதில் எழுதிய விஷயமாவது:—'அன்புள்ள சினேகிதையே! துளசிங்கம் பிரபு இப்போது இங்கே இருக்கிறார். அவர் ஒரு மாதை அழைத்துக்கொண்டு பரிதிபுரம் போய்க்கொண்டிருக்கிறார். அங்குச் சென்ற பின் அவர் அம்மாதை மணந்துகொள்ளப் போகிறார். ஆனால் பச்சையப்பர் என்பவர் இங்கு வந்து, அவர்கள் செல்லுமிடங்களுக்கெல்லாம் தானும்போய் அவர்கள் முயற்சி நிறைவேறாதபடி தடுப்பதாகக் கூறுகிறார். அவர்கள் பேசியதை நான் மறைவாக இருந்து கவனித்தேன். நீயும் உன் சரித்திரத்தை என்னிடம் கூறியிருக்கிறாய் அல்லவா! அதை ஒப்பிடும்போது துளசிங்கம் பிரபுதான் நீ முன்பு கலியாணம் செய்துகொண்டவர் என்று தெரிகிறது. இந்த நிலைமையில் நான் என்ன செய்வது? நீ அவர்களுடைய விவாகத்துக்குத் தடையாக இல்லையென்று துளசிங்கம் கூறியது உண்மைதானா? உடனே பதில் உன் அன்புள்ள கமலவதி!'

அக்கடிதத்தைக் கமலவதி நன்றாக மடித்து ஒரு பட்டுத் துணியில் அதைக் கட்டிவிட்டு அத்துணியை ஒரு அழகிய புறாவின் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டு அப்புறாவை மாடியின் கூரையிலுள்ள துவாரத்தின் வழியே வெளியே விட்டாள். அதுவும் அவ்விடத்திலிருந்து அதிக சந்தோஷத்துடன் வெகு வேகமாகப் பறந்து சென்றது. அப் பறவை அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டதும் கமலவதி, 'என் சினேகிதை இந்தப் புறா அங்குபோய்ச் சேரும்போது வீட்டிலேயே இருந்து இக்கடிதத்தைக் கண்டதும் உடனே பதில்

எழுதிக்கொடுத்தால் இன்னும் இரண்டுமணி நேரத்துக்குள் எனக்குப் பதில் கிடைத்துவிடும்' என்று நினைத்தாள். பிறகு அவள் மாடியைவிட்டுக் கீழே இறங்கிவந்து தன் பெற்றோர்களிடம், தான் மறைவிலிருந்து கேட்ட விஷயங்களையும், தன் சிநேகிதைக்கும் அதற்கும் சம்பந்தமிருப்பதைத் தான் அறிந்ததையும், அவளுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருப்பதையும் விவரமாகக் கூறினாள். இதற்கிடையில் பச்சையப்பர் பயமுறுத்தி விட்டுப் போனதால் கற்பகம் கவலையடைந்திருந்தாள். அவளுக்குச் சமாதானம் செய்து சந்தோஷப்படுத்துவதில் துளசிங்கம் பிரபு அதிக சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. பச்சையப்பர் சொன்னதிலிருந்து விவாகம் நடக்கமுடியாமற்போகுமோ என்று கற்பகம் அஞ்சினாள். அப்படிக் கலியாணம் நடக்காமற்போனால் தான் வீடு திரும்பிச் செல்ல முடியாதாகையால் துளசிங்கம் பிரபுவின் வைப்பாட்டியாகத்தான் இருக்கநேரிடுமோ என்றும் கவலைப்பட்டாள். ஆயினும் கலியாணம் என்று செய்துகொண்டுவிட்டால், ஊரார் அதை மதித்தாலும் மதிக்காவிட்டாலும் தன் காதலனுடன் கூடி வாழ சௌகரியமாய் இருக்குமே என்னும் எண்ணத்துடன் விவாகம் பதிவு செய்துகொண்டு விடுவதே சரி என்று நினைத்தாள்.

துளசிங்கம் தனக்கு உண்மையில் அவளிடமிருக்கும் காதலையும், தனது கண்ணியமான யோசனையையும் அவளிடம் விவரமாகக்கூறிப் பச்சையப்பர் முயற்சியால் கண்ணியமான யோசனையாகிய விவாகம் செய்துகொள்வதென்பது நிறைவேறாமற்போனாலும் தன்னைவிட்டு அவள் போய்விடக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டான். அவளுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராய் இருப்பதாகவும் தெரிவித்தான். அவனுடைய வார்த்தைகளில் உண்மை

நிரம்பிக் கிடந்தது. அப்போது கற்பகம் தன் அந்தரங்கத் தோழியும், தன்னிடம் அதிக அபிமான முடையவளுமான பார்வதியின் முகத்தைப் பார்த்தாள். அவளும் துளசிங்கத்தின் வார்த்தைகளை நம்பி அவனுடன் இருக்க வேண்டுமே யொழிய மீண்டும் இரத்தினபுரிக்குச் செல்வது கூடாது என்று கூறுபவள் போன்ற முகத்தோற்றத்தை யுடையவளாக இருந்தாள். ஆகவே கற்பகம் நீண்டநேரம் யோசனை செய்து காதலுக்கு இரையாகி இதர விஷயங்களை யெல்லாம் மறந்து தன் காதலன் மீது அன்புடன் சாய்ந்து, 'காதல! நான் உன்னுடையதே, எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் இனி நான் உன்னைவிட்டுப் பிரியேன் இது சத்தியம்' என்று கூறிவிட்டாள். இவ்வாறுகப் பச்சையப்பர் அவ்வறையை விட்டுச் சென்ற ஒரு மணி நேரத்துக்குப்பின் கற்பகம் மன நிம்மதி யடைந்தாள். தான் எப்படி நடந்துகொள்வது என்பதில் ஒருவித முடிவுக்கு வந்து விட்டபடியால் அவள் மனத்தில் தோன்றியிருந்த குழப்பம் ஒருவாறு அடங்கி விட்டது.

அச்சமயத்தில் கமலவதி அவ்வறையின் கதவைத் தட்டினுள். இதற்குமுன் அவள் கதவைத் தானுகவே திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள் அப்போது அப்படிச்செய்ய மனங்கொள்ளவில்லை. ஏனெனின் பச்சையப்பர் மிரட்டி விட்டுப் போனதால் காதலர்கள் இருவரும் கவலைப்பட்டு அதனுல் பாஸ்பரம் ஏதேனும் ஆறுதல் வார்த்தைகள் கூறிக் கொண்டிருக்கலாம் என்று அவள் நினைத்தாள். அவள் கதவைத் தட்டியதும் அவளை உள்ளே வருமபடி காதலர் இருவரும் கூறினர். கற்பகம் மன அமைதியுடனும் திருப்திகாமாகவும் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவள் அதிக சந்தோஷமடைந்து, அவர்களுக்கு ஆகாரம் கொண்டுவாலாமா? என்று கேட்டாள். அதற்குத் துளசிங்கம் பிரபு ஆகாரம்

கொண்டு வரலாம் எனச் சொன்னதுடன், 'பச்சையப்பர் இவ்விடத்தைவிட்டுப் போகும்போது யாரோ உளவர்கள் உற்றுக்கேட்பதாகச் சொன்னானே. அது விஷயமாக உனக்கு ஏதேனும் தெரியுமா?' என்று கேட்கவும் கமலவதி 'அப்போதுதான் நான் மேல்மாடிக்குச் சென்றுகொண்டிருந்தேன். அந்த ஆள் அக்கிரமமாகப் பழி சாட்டியதால் அதைக் கவனியாமலும் நான் போய்விட்டேன்' என்றாள். அதற்குத் துளசிங்கம் சிரித்துக்கொண்டே, 'நீ கதவின் பின்னால் இருந்து கேட்டிருந்தாலும் பாதகமில்லை. எங்களுக்கு நீ உன்னால் இயன்ற உதவியே செய்வாய் என்று நம்புகிறோம்' என்று கூறினான். அதற்கு அவளும், 'ஆம், கட்டாயம் உதவி செய்வேன்' என்று உறுதியுடன் சொன்னாள்.

கமலவதி உடனே அவ்வறையைவிட்டு வெளியே போய்ச் சிறிது நேரத்துக்கெல்லாம் தன் மற்றொரு சகோதரியுடன் அங்குவந்து அவர்களுக்குவேண்டிய ஆகாரத்தைப் பரிமாறினாள். ஆகாரம் இனிமையானதாகவே இருந்தது. எனினும் துளசிங்கமும் கற்பகமும் சொற்பமாகவே உட்கொண்டார்கள், பார்வதிமட்டும் அதிகமாகவே சாப்பிட்டாள். அவர்களுடைய ஆகாரம் முடிந்தபின்னர் கமலவதி மேல்மாடியின்மீதுள்ள தனது அறைக்குச் சென்று தான் எதிர்பார்க்கும் பதில் கிடைக்குமா என்று காத்திருந்தாள். அப்போது அவள் ஒரு கடிதத்துடன் தன் புறாவை அனுப்பி இரண்டரைமணி நேரத்துக்குமேல் ஆகியிருந்தது. உடனே அவள் எதிர்பார்க்கும் பறவையும் வந்து சேர்ந்தது. ஆனால் அவள் அனுப்பிய பறவையே திரும்பி வரவில்லை. அப்பறவை அங்கு ஓய்வுக்காக நிறுத்தி வைக்கப்பட்டு மறறொரு பறவை அனுப்பப்பட்டிருந்தது. அப்பறவையைக் கமலவதி ஆர்வத்துடன் வரவேற்று அதற்குவேண்டிய உபசாரங்களையெல்

லாம் செய்து தட்டிக் கொடுத்தபின்னர் அதன் இறகுக்குள் இருந்த கடிதத்தை எடுத்தாள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

'அன்புள்ள கமலவதி! துளசிங்கம் பிரபு கூறிய அனைத்தும் உண்மையே. அவரை நான் எனது கணவன் என்று நினைக்கவே இல்லை. சட்டரீதியாக அவரை நான் எவ்விதத்திலும் துன்புறுத்தமாட்டேன். அந்த பச்சையப்பர் என்பவர் துளசிங்கத்தை இம்சித்தால் அவரிடம் சுகானந்தம் பிரபுவின் மனைவியாகிய ரங்கநாயகி சீமாட்டி என்று சொன்னால் போதும். அப்பதமே மந்திர சக்தி வாய்ந்த தாயத்தைப்போல் வேலைசெய்யும். இப்பதத்தைத் துளசிங்கம் பிரபு உபயோகித்து வெற்றி பெறலாம். உன் அன்புள்ள, ச—ய்' என்று இருந்தது.

இக்கடிதத்தைக் கமலவதி படித்து ஆனதும் அதைத் தன் இடுப்பில் சொருகிக்கொண்டபிறகு அப்பறவைக்கு வேண்டிய ஆகாரத்தை அளித்துப் பின்னர் அதை வந்த வழியே அனுப்பிவிட்டாள். பிறகு கமலவதி தன் பெற்றோர்களும் தங்கைமாரும் உட்கார்ந்திருந்த அறைக்குச் சென்று தான் தன் சினேகிதைக்குக் கடிதம் எழுதி யனுப்பி அதற்குப் பதில் பெற்றதையும் அதிலுள்ள விஷயத்தையும் கூறினாள். அவர்களும் காதலர்களான துளசிங்கமும் கற்பகமும் பச்சையப்பர் கொடுமையினின்றும் விலகித் தங்கள் நோக்கத்தில் வெற்றிபெறலா மென்பதை அறிந்ததும் சந்தோஷப்பட்டார்கள். இப்போது கமலவதிக்கு ஒரு சிரமமான வேலை ஏற்பட்டுவிட்டது. அதாவது எந்தப் பதத்தைத் துளசிங்கம் சொன்னால் அந்தப் பச்சையப்பர் பயப்படுவானோ அதைத் துளசிங்கத்தினிடம் அறிவிக்கவேண்டும். ஆனால் அச்செய்தி அவளுக்கு எப்படித் தெரிந்தது என்பதை அவனிடம்

சொல்ல முடியாது. எனினும் எப்படியாவது அதைத் துள சிங்கத்தினிடம் தெரிவிக்கவேண்டுமென்னும் நல்லெண்ணத் துடன் மாடிக்குச் சென்றாள். அவர்கள் இருந்த அறைக் குள் கமலவதி நுழைந்ததுமே அவள் முகத்தைப்பார்த்து அவள் ஏதோ முக்கிய விஷயத்தைத் தெரியப்படுத்தவே வந் திருக்கிறாள் எனத் தெரிந்துகொண்டார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தபடியே கமலவதியும் துளசிங்கம் பிரபுவினிடம், 'ஐயா, உங்களுடைய சொந்த விஷயத்தில் நான் தலையிடுவதுபற்றி என்னை மன்னிக்க வேண்டுகின்றேன். நான் நல்லெண்ணத்துடனேயே இதில் தலையிடுகிறேன் என் பதும் உங்களுக்குத் தெரியவேண்டும். பச்சையப்பரை அடக்கக்கூடிய ஒரு பதத்தைத் தெரிவிக்க என்னால் முடியும்' என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் கற்பகம் அதிக சந் தோஷத்துடன், 'இதுவும் சாத்தியமானல் நான் அதிக நன்றி யறிதலுடையவளாக இருப்பேன்' என்று கூறிக்கொண்டே தன் ஆசனத்தைவிட்டு எழுந்து கமலவதியை நோக்கி வந் தாள். அதற்குக் கமலவதி, 'ஆம்; என்னால் சாத்தியப்படும். நான் சொல்லும் வழியை நீங்கள் பின்பற்றினல் பச்சையப் பர் உங்களிடம் அடங்கி விடுவது நிச்சயம். உண்மையைச் சொல்கிறேன் கேளுங்கள். பச்சையப்பர் உள்ளே வந்து பேசிக்கொண்டிருந்தபோது நான் கதவின் பின்னலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனல் நல்ல நோக்கத்துட னேயே அவ்வாறு கேட்டேன் என்று சத்தியம் செய் கிறேன்' என்றாள்.

அதற்குத் துளசிங்கம், 'நீ உண்மையில் எங்களுக்கு நல்ல விதத்தில் உதவி புரிவாயானல் நீ கதவின் பின்ன லிருந்து கேட்டதையும் நாங்கள் மறந்துவிடுகிறோம்' என்று கூறியதற்குக் கமலவதியும், 'நான் கட்டாயம் உங்களுக்கு

உதவிபுரிவேன். இதிலொன்றும் சந்தேகமே இல்லை' என்றாள். அப்போது காதலர்கள் அவளைப் பார்த்து ஆவலுடன், 'நாங்கள் இப்போது செய்யவேண்டியதென்ன? எவ்வாறு நடந்துகொண்டால் அந்தப் பச்சையப்பர் எங்களிடம் அடங்கிவிடுவான்' என்று கேட்கவும் கமலவதி, 'இதற்காக நீங்கள் அதிக சிரமப்பட வேண்டியதுமில்லை. சுகானந்தம் பிரபுவின் மனைவியான ரங்கநாயகி சீமாட்டி என்னும் சொல்லைப் பச்சையப்பர் எதிரில் சொன்னால்போதும். உடனே அவன் மந்திர சக்திக் குட்பட்ட பாம்புபோல் அடங்கிவிடுவான்' என்றதும் அவர்கள் ஆச்சர்யப்பட்டனர். துளசிங்கம் மட்டும், 'இப்பதத்தைச் சொல்வதால் அவன் அடங்கிவிடவேண்டிய காரணமென்ன?' என்று கேட்டான். அதற்கு அப்பெண், 'இப்போது நான் கூறியவற்றிற்குமேல் என்னை ஒன்றும் கேட்கவேண்டாம். சொன்னபடி செய்தால் வெற்றியடைவீர்கள். மேலும் கற்பகத்துக்கும் நான் ஒரு உறுதி கூற விரும்புகிறேன். அதாவது துளசிங்கம் பிரபுவை இதற்கு முன் விவாகம் செய்துகொண்ட பெண் இனி எவ்விதத்திலும் உங்கள் இன்பத்தில் குறுக்கிடப் போவதில்லை. துளசிங்கம் தன் கணவன் அல்ல என்று அவள் தீர்மானித்துவிட்டாள். அவளுக்கும் இப்பிரபுவுக்கும் இனி எத்தகைய சம்பந்தமும் கிடையாது. பிரபுவுக்கு விரோதமாக அவள் எக்காரியத்தையும் செய்யமாட்டாள் என்பது சத்தியம். ஆனால் இதைப் பற்றி யெல்லாம் என்னை ஒன்றும் கேட்காதீர்கள். இதற்குமேல் என்னால் ஒன்றும் சொல்லமுடியாது' என்று கூறினாள்.

கமலவதி இவ்வாறு கூறிக்கொண்டிருந்தபோது துளசிங்கம், கற்பகம், பார்வதி ஆகிய மூவரும் கண் இமைகொட்டாமலும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தனர். சொற்ப நேரத்துக்குப் பிறகு துளசிங்கம் பிரபு கமலவதியைப்

பார்த்து, 'நீ எந்தப் பெண்ணின் சார்பாகப் பேசிக்கொண்டிருக்கிறாயோ. அவள் உனக்குத் தெரியுமோ?' என்று கேட்டான். அதற்குக் கமலவதி, 'அவள் எனக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் இருவரும் சிறு பெண்களா யிருந்தபோது ரத்தினபுரிக்கு அடுத்த ஒரு தர்ம பாடசாலையில் படித்தோம். இப்பால் சில வருஷங்களாக நாங்கள் அடிக்கடி சந்திப்பதுமுண்டு. ஆனால் எங்கள் சினேகத்தைப்பற்றிய விவரமொன்றையும் இப்போது சொல்ல முடியாது. நான் சொன்னபடி நீங்கள் செய்தால் பச்சையப்பரை அடக்கிவிடலா மென்பது மட்டும் நிச்சயம். பிரபுவே! உடனே இதைச் சோதித்துப் பார்த்துவிடுங்கள். அப்போதுதான் உங்களுடைய மனம் நிம்மதியடையும்' என்று தெரிவித்தாள்.

இதனால் அதிக சந்தோஷமடைந்த கற்பகம் கமலவதியின் தோளில் கையைப் போட்டுக்கொண்டு ஆர்வத்துடன், 'உனக்கு நாங்கள் எவ்வாறு கைம்மாறு செலுத்தப்போகிறோம்' என்றாள். துளசிங்கம் பிரபுவும், 'பெண்ணே! நீ பரோபகார குணமுடையவள். நாங்கள் உன்னை எக்காலத்தும் மறக்கமாட்டோம்' என்றான். அப்போது கமலவதி, 'பிரபுவே! தாங்கள் எனக்கு உதவி செய்யவேண்டிய காலமும் ஒன்று ஏற்படலாம். எதிர்காலத்தில் என்ன நிகழப்போகிறதென்று இப்போதே யாரால் சொல்ல முடியும்' என்று சொல்லி அச் சம்பாஷணையை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டாள். கமலவதி அவ்வறையைவிட்டுச் செல்ல முயன்றபோது பிரபு அவளை நிறுத்தி பச்சையப்பர் தங்குமிடம் எது என்று விசாரித்தான். அந்த இடத்தைத் தெரிவித்ததும் துளசிங்கம் உடனே அவ்விடத்துக்குப் போகப் போவதாகத் தெரிவித்தான். கமலவதியும் வெளியே போய்விட்டாள். துளசிங்கம் தன் காதலி கற்பகத்தை ஒரு

முறை அணைத்துக்கொண்டபின்னர் அக்கட்டடத்தைவிட்டுப் புறப்பட்டான்.

அவன் தெருவில் வந்ததுமே சாதாரண உடையை அணிந்துகொண்டிருந்த ஒருவன் இருப்பதைக் கண்டதும் அம்மனிதன் பச்சையப்பருடைய உளவாளியாக இருக்க வேண்டுமென்று நினைத்தான். துளசிங்கம் எந்த வழியாகச் சென்றானோ அவ்வழியே அம் மனிதனும் பின்தொடர்ந்த தால் துளசிங்கத்தின் சந்தேகம் நிவர்த்தி யாகிவிட்டது. இருந்தாலும் அவனைக் கவனியாதவன்போல் துளசிங்கம் விரைவாக நடந்துசென்று பச்சையப்பர் தங்கியிருந்த வீட்டை யடைந்தான். அவ்வீட்டின் கதவைத் தட்டிய தும் ஒரு ஆள் வந்து கதவைத் திறந்தான். பச்சையப்பர் உள்ளே இருக்கிறாரா என்று விசாரித்ததில் இருப்பதாகத் தெரிந்ததால் அவன் உள்ளே சென்றான். பச்சையப்பர், நன்றாக அலங்கரிக்கப்பட்ட ஒரு அறையில் ஒரு மேஜையின் அருகில் உட்கார்ந்துகொண்டு பல தஸ்தாவேஜ்களையும் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

பச்சையப்பர் துளசிங்கம் பிரபுவைக் கண்டதும் தான் ஏதோ வெற்றி யடைந்துவிட்டவன்போலக் கருதி 'ஆ! நீ என்னிடம் அடங்கிவிட்டாய் என்பதைத் தெரிவிக்கவே இப்போது இங்கு வந்திருப்பாய் என்று நம்புகிறேன்' என்றான். அதற்குத் துளசிங்கம், 'இல்லவே இல்லை. உன்னைப் பணிய வைக்கவே வந்திருக்கிறேன். முன்பு நடந்த கலியாணத்தைப்பற்றிய விவரமே எனக்கொன்றும் தெரியாமலிருக்கும்போது இப்போது நான் கலியாணம் செய்து கொள்வதைத் தடுக்க உனக்கு என்ன அதிகாரமிருக்கிறது' என்று கேட்டான். அப்போது பச்சையப்பர், 'அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஐந்து வருஷங்களுக்குமுன் நீ கலியாணம்

செய்துகொள்ளும்போது கொடுத்த வாக்குறுதியின்படி இப்போதும் நடக்கக் கட்டுப்பட்டிருக்கிறாய். எந்த விவாத்தையும் கேட்கவேண்டாம்' என்றதும் துளசிங்கம், 'அந்த விவரம் தானாகவே என் காதில் விழுந்திருந்தால் அப்போது என்ன செய்வான்' என்று கேட்டதும் பச்சையப்பர் அதிக ஆத்திரமடைந்து பரபரப்புடன், 'என்னை இவ்வாறெல்லாம் மிரட்டப் பார்க்கின்றாயா? நீ கலியாணம் செய்துகொள்ளவே கூடாது. நான் எந்தப் பெண்ணை உனக்கு விவாகம் செய்து கொடுத்தேனோ அவள்தான் சீமாட்டியாக இருக்கவேண்டும் என்பது என் எண்ணம்' என்றான்.

அதற்குத் துளசிங்கம், 'முடியாது. எனக்கு எத்தகைய சௌகரியமும் இல்லாத ஒரு ஏற்பாட்டுக்கு எந்நாளும் உட்பட்டிருக்க என்னால் முடியாது. அப்போது நான் பலவித கஷ்ட சந்தர்ப்பத்தில் இருந்ததால் அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டேன். இறுதிவரை அப்படியே இருக்கமுடியாது' என்றான். அதைக்கேட்ட பச்சையப்பர், 'அப்போது நீ கஷ்டதசையில் இருந்தாய் என்பது உண்மையே. ஆயினும் நீ ஒப்புக்கொண்டதைக் கடைசிவரை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். உன் கலியாணம் ஆனபிறகு இப்போதுதான் நாம் முதன்முறையாகச் சந்திக்கிறோம். கலியாண காலத்தில் நான் உன்னிடம் சொன்னதுபோலவே உன் விஷயங்களையெல்லாம் நான் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். இப்போதுதான் சமீபத்தில் இரண்டு மூன்று மாதங்களாக நான் உன்னைக் கவனிக்க முடியவில்லை. கற்பகத்தைக் கலியாணம் செய்துகொள்வதால் கிடைக்கும் செல்வத்தை நான் தடைப்படுத்துகிறேன் என்று நீ நினைப்பதாயின் நானே உனக்குவேண்டிய பொருளைத் தரத் தயாராக இருக்கிறேன்' என்றான். அப்போது துளசிங்கம் பிரபு அதிக

கோபத்துடன், 'போதும், நிறுத்து. நான் உன்னைப்போலப் பணப் பைத்தியம் பிடித்தவனல்ல. என்னுடன் வந்திருக்கும் கற்பகம் என்னும் பெண்மணிக்குச் சொந்தமாக ஒரு பைசா வும் கிடையாது. நான் உன்னுடன் அதிகம் பேசிக்கொண் டிருக்க விரும்பவில்லை. நீ என் இக்கலியாண விஷயத்தில் தலையிட முடியாது. உன்னை எதிர்க்க என்னால் முடியும். நான் ஏதோ பொய் ஆர்ப்பாட்டம் செய்வதாக நினைக்க வேண்டாம். சுகானந்தம் பிரபுவின் மனைவி ரங்கநாயகியார் என்னும் பெயரைப் பிரஸ்தாபித்த பின்னரேனும் நான் கூறு வது உண்மை என்று நீ அறியவேண்டும்' என்றான்.

இச் சொல்லைக்கேட்டதும் பச்சையப்பர் திடுக்கிட் டான். சிறிது நேரம்வரை ஒன்றும் பேசமுடியாமல் திகைத் தான். அவனது முகமும் வெளுத்தது. இதைக்கண்ட துளசிங்கம் பிரபு, தான் உபயோகித்த சொல் எவ்வளவு மந் திர சக்தி வாய்ந்தது என்பதை அனுபவமூலம் அறிந்து சந் தோஷப்பட்டான். இதற்குள் பச்சையப்பர் ஒருவிதமாகச் சமாளித்துக்கொண்டு பீதியுடன், 'இந்த விஷயம் உனக்கு எப்படித் தெரிந்தது?' என்று கேட்டான். அதற்குத் துள சிங்கம் தன் எதிரில் இருக்கும் அந்த மனிதன்மீது தன் முழு அதிகாரமும் செலுத்தக்கூடியவன் போன்ற தோரணையில், 'எனக்கு அது எப்படித் தெரிந்தது என்பதுபற்றி நீ கேட்க வேண்டியதில்லை. இதற்குமேல் அது விஷயமாக என்னு டன் ஒன்றும் பேசவேண்டாம்' என்று உறுதியுடன் கூறி னான். அப்போது பச்சையப்பர், 'சரி. உன் மனைவிக்கும் இவ்விஷயங்களெல்லாம் தெரியுமா?' என்று மிக்க ஆவலுட னும் ஏதோ அச்சமடைந்தவன்போலும் கேட்டான். அதற் குத் துளசிங்கம், 'நான் ஒன்றையும் சொல்லமாட்டேன். இதற்குமேல் நீ எனக்கு எப்படிப்பட்ட கேள்வியும் கேட்க

லாகாது. நானாக உன்னுடன் சண்டைக்கு வரவில்லை. நீ என்னைத் துன்புறுத்த முயன்றதால் நான் உன்னை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது,' என்றான். அப்போது பச்சையப்பர், 'அப்படியானால் நான் உன்னை எவ்விதத்திலும் துன்புறுத்தமாட்டேன் என்று உறுதி கூறிவிட்டால், நீ என் சம்பந்தமான இந்த இரகசியத்தை வெளியில் யாரிடமும் சொல்லாமல் இருப்பாயோ?' என்று பரிவுடன் கேட்டான்.

அதற்குத் துளசிங்கம், 'அவ்வாறே செய்ய ஆட்சேபமொன்றுமில்லை. ஆயினும் உன் உளவாளி ஒருவன் என் பின்னாலேயே திரிகிறதுபோல் தெரிகிறதே, அதற்கு என்ன செய்யப்போகிறாய்?' என்று கேட்டான். அப்போது பச்சையப்பர் மிக்க சமாதானமுறையில் அடக்கத்துடன், 'நான் அவனை விலக்கி விடுகிறேன். இனி யாரும் உன் பின்னால் வர மாட்டார்கள். நான் இனி உன்னுடன் சினேகமுறையிலேயே இருப்பேன்' என்று கூறிக்கொண்டே அவன் அம்மேஜையினின்றும் சிறிது தூரத்தில் சென்று அவ்வறையிலிருந்த ஜன்னல் வழியே, வெளியில் நின்றுகொண்டிருந்த உளவாளியை அழைத்து இனி அவன் துளசிங்கத்தின் பின்னால் திரியவேண்டியதில்லை யென்று சொல்லிக்கொண்டே சிறிது வேறுபக்கமாகத் திரும்பிப் பேசிக்கொண்டிருந்தான். இதற்குள் துளசிங்கம் அந்த மேஜையின்மீதிருந்த சில ரிகார்டுகளைப் பார்த்தான். அதில் ஏதோ ஒரு பெயரைக் கண்டதும் அவன் அதிக ஆர்வத்துடன் அக்கடிதத்தைப் படித்தான். அதில் இருந்த விஷயங்களை அறிந்து அதிக ஆச்சர்ய மடைந்தான். இதற்குள் பச்சையப்பர் அம்மேஜையின் அருகில் வந்துவிட்டதால் துளசிங்கமும் ஒன்றையும் பார்க்காதவன்போல் திரும்பிவிட்டான்.

பச்சையப்பர் துளசிங்கம் பிரபுவினிடம், 'அன்பா!

இனி அந்த மனிதன் உன் பின்னால் திரியமாட்டான். நான் சில பான வகைகளைக் கொண்டுவரும்படி சொல்லி யிருக்கி றேன். நீ என்னுடன் விரோதப்பான்மையுடன் இல்லை என் பதற்கு அடையாளமாக அதை அருந்திவிட்டுத்தான் போக வேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். அதற்குத் துள சிங்கம், 'அது எப்படிமுடியும்? இன்று பகல் நமக்குள் நடந்த வாக்கு வாதத்தைக் கவனிக்கும்போது இவ்வாறு பரஸ்பரம் சினேகத்துடன் பானத்தை அருந்துவது சாத்தியமான காரியமல்ல. ஆயினும் நாம் பரஸ்பரம் இனி ஒருவருக்கொரு வர் எவ்விதத்திலும் துன்புறுத்துவதில்லை யென்று ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டால் நான் உன்னுடன் பானத்தை அருந்தத் தயாராக இருக்கிறேன்' என்றதும் பச்சையப்ப ரும், 'அப்படியே ஆகட்டும்; அவ்வாறே ஒப்பந்தம் செய்து கொள்வோம்' என்று கூறினான். பகலில் முருகேசனுடைய ஓட்டலிலும், இப்போது தன் வீட்டில் துளசிங்கம் நுழைந் ததும் அவனை மிரட்டிய பச்சையப்பர் இப்போது மிகவும் பணிந்துகொடுத்து பேசுவதன் காரணம் அவனுடைய அந்த ரங்க இரகசியம் துளசிங்கத்துக்குத் தெரிந்துபோனதுதான். இப்படிப்பட்ட இரகசியம் துளசிங்கத்துக்குத் தெரிய உதவி யாய் இருந்தது கமலவதியே. ஆதலின் அக் கமலவதிக்குத் துளசிங்கமும் அவனது காதலியான கற்பகமும் அதிகம் கட மைப்பட்டிருக்கின்றனர் என்பதில் என்ன சந்தேக மிருக் கிறது?

துளசிங்கம் அங்கிருந்து வெளியே செல்வதற்குத் தயா ரானபோது பச்சையப்பர், துளசிங்கத்தைப் பார்த்து, 'ஒரே ஒரு வார்த்தை! உனக்கு விவாகம் செய்து வைக்கப்பட்ட உன் மனைவியான அப்பெண்மணி இப்போது எங்கே இருக் கிறாள் என்று உனக்குத் தெரியுமா? தயவுசெய்து அவள்

வசிக்கும் இடத்தைச் சொல்' என்று ஆவலுடன் கேட்டான். அதற்குத் துளசிங்கம் எத்தகைய பதிலும் கூருமல், 'நான் போய் வருகிறேன். உனக்கு வந்தனம்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். அங்கிருந்து புறப்பட்ட துளசிங் கம் முருகேசனுடைய ஓட்டலை அடைவதற்குள் வழியில் பலவாறு சிந்தித்துக்கொண்டே வந்தான். சுகானந்தம் பிர புவின் மனைவி ரங்கநாயகியார் என்ற பெயர் எவ்வளவு மந்திர சக்தி வாய்ந்ததாக இருந்தது என்பதைக்கண்டு அளவிலா ஆச்சர்யமடைந்தான். அப்பெயர் மகாகர்வியான பச்சையப் பரின் அகம்பாவத்தை அடக்கிவிட்டதைக்கண்டு சந்தோஷ மடைந்தான். அதுமட்டுமா? பச்சையப்பருடைய வீட்டில் அவன் மேஜைமீதிருந்த ரிகார்டில் காணப்பட்ட பெயரைக் கண்டது அவனது ஞாபகத்துக்கு வரவே ஆச்சர்யம் இன் னும் அதிகமாகிவிட்டது.

துளசிங்கம் முருகேசனுடைய ஓட்டலுக்குள் சென்ற தும் கீழ்க்கட்டிலேயே ஹாலில் நின்றுகொண்டிருந்த கமல வதியிடம் தான் வெற்றி யடைந்ததைக் குறிப்பாகத் தெரி வித்துவிட்டு மாடிக்குச் சென்ருன். அங்கே தன் காதலி கற்பகத்தை மனமாரத் தழுவிக்கொண்டு, பார்வதியையும் சந் தோஷம் நிறைந்த பார்வையுடன் பார்த்தான். இனி எப்ப டிப்பட்ட அச்சத்துக்கும் இடமில்லை என்று மூவரும் அறிந்து சந்தோஷப்பட்டனர். அன்று இரவு கற்பகமும் பார்வதியும் தூங்கிவிட்டபிறகு துளசிங்கம் தனியே உட் கார்ந்துகொண்டு மிக அவசரமாக ஒரு கடிதத்தை எழுதி அதற்குச் சீலும் போட்டான். ஆனல் அதன்மீது விலாசம் எழுதவில்லை. பிறகு அவன் ஒரு மணியடித்து அங்கு வந்த சேவகன்மூலம் கமலவதியைத் தன் இருப்பிடத்துக்கு வர வழைத்துக்கொண்டான். அவள் அங்குவந்ததும், 'பெண்

மணியே! நான் முன்பு விவாகம் செய்துகொண்ட அந்த மாது உனக்கு நன்றாக அறிமுகமானவள் என்று தெரிகிறது. அவள் என்னைத் தன் பந்தத்தினின்றும் தாராள நோக்கத்துடன் விடுவித்துவிட்டாள். அவளுடைய விலாசமும் உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. என்னிடம் அந்த விலாசத்தைச் சொல்லலாகாது என்று நீ நினைத்திருந்தால் அதைச் சொல்லவேண்டியதில்லை. ஆனால் இந்தக் கடிதத்தையாவது நீ அவளுக்கு அனுப்பிவிட வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்,' என்றான். உடனே கமலவதியும் அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, 'இதை நான் அவளுக்கு அனுப்பிவிடுகிறேன்' என்றாள்.

அப்போது துளசிங்கம், 'பெண்மணியே! உனக்கு நான் மீண்டும் வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்' என்றதும் அவள், 'பிரபுவே! எனக்கு எத்தகைய வந்தனமும் செலுத்தவேண்டிய அவசியமில்லை. நீங்கள் என் தந்தையாருக்குத் தாராளமாகப் பண உதவி செய்திருக்கிறீர்கள்! இதோ பாரும்! உமது காதலி எனக்கு விலையுயர்ந்த மோதிரத்தைச் சன்மானம் செய்திருக்கிறாள். நான் இதைப் பெற்றுக்கொண்டிருக்கமாட்டேன். ஆயினும் அன்புடன் கொடுக்கப்படுவதைப் பெற மறுப்பது தவறு அல்லவா? நீங்கள் எதைக்கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நான் உங்களுக்கு என்னால் இயன்றதைச் செய்யத் தவறமாட்டேன். நீங்கள் இருவரும் இன்பமாக இருப்பதைக் காணவே நான் விரும்புகிறேன்' என்றாள். பிறகு அவள் அவ்வறையைவிட்டுப் போய்விட்டாள். துளசிங்கம் பிரபுவும் பின்னர் படுக்கைக்குப் போய்விட்டான்.

மறுநாள் காலை துளசிங்கமும், கற்பகம், பார்வதி ஆகியோரும் முருகேசன் குடும்பத்தாரிடம் சொல்லிக்கொண்டு

அங்கிருந்து புறப்பட்டுத் துறைமுகம் சென்று கப்பலேறிப் பரிதிபுரம் போய்ச் சேர்ந்தார்கள். அவர்களை வழியில் யாரும் எத்தகைய தொந்திரவும் செய்யவில்லை. எவரும் பின் தொடர்ந்து வரவும் இல்லை. அவர்கள் பரிதிபுரம் சென்றதும் இரத்தினபுரி புரோகிதரின் காரியாலயம் சென்று துளசிங்கமும் கற்பகமும் விவாகம் செய்துகொள்ள ஏற்பாடு செய்தார்கள். அதே புரோகிதர்தான் முன்பு துளசிங்கத்தின் விவாகத்துக்கும் கர்த்தாவாக இருந்ததால் அவர் இந்த இரண்டாவது கலியாணத்துக்குக் காரணமென்ன என்று விசாரித்தார். துளசிங்கமும் முதல் விவாகத்தின் மர்மத்தையெல்லாம் விளக்கி இந்த இரண்டாவது விவாகத்துக்கு எத்தகைய தடையுமில்லையென்றும், முதல் மனைவியே இனி இவ் விஷயத்தில் தலையிடுவதில்லையென்று வாக்களித்திருப்பதாகவும் உண்மை நிலைமையை விவரித்துக் கூறவே அப்புரோகிதர் விவாகத்தை நடத்தி விட்டார். துளசிங்கமும் நல்ல உத்தியோகத்தைப் பரிதிபுரம் சர்க்காரிலேயே பெற்றிருக்கிறான் என்பதாலும் புரோகிதர் எவ்வித தடையும் செய்யவில்லை. கலியாணம் முடிந்துவிடவே சாதாரண கற்பகமாக இருந்தவள் கற்பகச் சீமாட்டியே ஆகிவிட்டாள்.

விவாகம் முடிந்ததும் கற்பகம், தன் சகோதரியான ராஜேஸ்வரிக்கு ஒரு நீண்டகடிதம் எழுதி, தாயாரும் சகோதரியும் கிருஷ்ணகிரிக்குப் போய்விட்டிருக்கிறார்கள் என்பதையும் அறியாமல் இந்த இரத்தினபுரி விலாசத்துக்கே அனுப்பினாள். விவாகமான மறுநாள் காலை துளசிங்கம் தன் மனைவியுடனும் பார்வதியுடனும், தனக்கென அளிக்கப்பட்ட சேவகனுடனும் அன்னியதேசம் புறப்பட்டுச் சென்றான். அவர்கள் சௌக்கியமாக அவ்விடம் போய்ச் சேர்ந்தார்கள்.

58-வது அத்தியாயம்

சகோதரியும் சகோதரனும்

இப்போது நாம் இந்திராபாயின் வாசஸ்தலத்தைக் கவனிப்போம். அங்கு ஒருநாள் காலை ஆகாரம் முடிந்ததும் அழகாக அலங்கரிக்கப்பட்ட அறையில் இந்திராபாயும் அவளது சகோதரனை மோகனசுந்தரமும் ஒரு சோபாவின்மீது உட்கார்ந்திருந்தார்கள். தன் சகோதரி ஒரு வழிப்பறி கொள்ளைக்காரி என்று ஹேமவதி சீமாட்டி கூறியது உண்மையே என்று மோகனசுந்தரம் தெரிந்துகொண்டு நான்கு அல்லது ஐந்து தினங்கள்தான் ஆகி யிருந்தன. இந்த நான்கைந்து தினங்களாக அவன் மனோவியாதியாலும் தேகவியாதியாலும் கஷ்டப்பட்டபடியால் அவனது முகம் வெளுத்திருந்தது. அவனுடைய சகோதரியோ பெண்களுக்கான நல்லஉடையை அணிந்துகொண்டு சிறிது துக்கத்துடன் ஒரு கையைத் தன் சகோதரன் தோள்மீது போட்ட வண்ணம் அவனுக்கு ஏதோ ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள். அவள் தன் சகோதரனிடம், 'சகோதர! நீ இவ்வாறு மனத்தளர்வை யடையாமல் உற்சாகமாக இருந்து உடம்பைத் தேற்றிக்கொண்டால் நானும் உற்சாகமாகப் பலகாரியங்களைச் செய்வேன். இல்லாவிட்டால் எனக்கும் கவலையும் துக்கமும் அதிகமாகி ஒரு வேலையும் செய்ய முடியாமற் போகும்' என்று சொன்னாள்.

அப்போது மோகனசுந்தரம், 'என தன்புள்ள சகோதரி சுலோசனா! நான் உன் மனம் துயரப்படும்படி நடந்து கொண்டதற்காக என்னை மன்னிக்க வேண்டும். ஆயினும் நான் என்ன செய்வேன். உன்னுடைய பழைய சரித்

திரத்தை நினைக்கும்போது துக்கம் வரத்தான் செய்கிறது, என்றான். அதற்கு அவள், 'சகோதர! என்னைச் சில தினங்களுக்கு முன் நீ சந்தித்தபோதே என்னுடைய உண்மையான நிலைமை உனக்குத் தெரிந்திருந்தால் அப்போது நீ இவ்வளவு தாராளமாக என்னைச் சகோதரவாஞ்சையுடன் ஆலிங்கனம் செய்து கொண்டிருப்பாயா? நான் நாதியற்று அலைகிறேனென்றாலும், பெண்களுக்கு முக்கியமான கற்பை நான் இழந்துவிடவில்லை. நடுஇரவில் ரஸ்தாக்களில் செல்வர்களை மடக்கிக் கொள்ளையடித்தேனென்றாலும் சந்துபொந்துகளில் நின்றுகொண்டு கண்டவர்களுக்கெல்லாம் இடங்கொடுத்து விபசாரம் செய்யவில்லை. எந்தக் குற்றம் செய்தாலும் அதற்கு நிவர்த்தியுண்டு. ஆனால் விபசாரம் செய்த பின்னர் அதற்குப் பரிகாரமில்லை. விபசாரம் செய்தவள் பிறகு வருந்தி நல்வழியில் நடக்க முயற்சிக்கலாம். ஆயினும் அவளது கற்பு கெட்டது மறுபடியும் பரிசுத்தமாகப் போகிறதா? எனக்குக் கலியாணமாயிற்று என்று பெயரேயொழிய நான் ஆடவா கைபடாத கன்னியாகத்தான் இருக்கிறேன்,' என்றாள்.

இதைக்கேட்டு அதிக சந்தோஷமடைந்த மோகனசுந்தரம், 'சுலோசனா! இன்னும் சில தினங்களுக்குள் நான் நீ உண்மையில் எப்படி இருந்தாய் என்பதைத் தெரிந்துகொண்டு விடுவேன். நீ சொன்னது வாஸ்தவமாயின் எப்படிப்பட்ட குற்றத்துக்கும் பரிகாரம் செய்துகொண்டு விடலாம். ஆனால் கற்பினின்றும் கூடத் தவறிவிட்டிருந்தால் பரிகாரத்துக்கு வழி இல்லை.' என்றதும் இந்திராபாய், 'சகோதரா! நான் ஆரம்பத்தில் அனாதையாகி எந்தத் தொழிலை ஏற்பது என்று யோசித்தபோதே கண்டவர் மனம் குளிரச் சுகித்து விபசாரியாகிப் பணம் சம்பாதிப்பதா? அல்லது கொள்ளைக் கூட்டத்

தலைவியாகிச் சாமார்த்தியத்தால் வாழ்வதா என்று யோசித்தேன். கேவலம் விபசாரியாவதைவிட இப்போது நான் ஏற்றுக்கொண்டுள்ள தொழிலே சிறந்தது என்று முடிவு செய்தேன். நீ என்னை இப்போதாவது அன்புடன் அணைத்துக் கொள்வாயா? அல்லது என் பெயரைக் கேட்கும் போதே வெட்கப் படுவாயா?' என்று ஆவலுடன் கேட்டாள் அதற்கு அவன் மிகப் பெருமையுடன், 'சுலோசனு! நீ இவ்வளவு தூரம் கூறியதை யெல்லாம் கேட்ட பின்னரும் நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? என் சகோதரியைக்கண்டு நான் தலைகுனிய வேண்டிய கேவலமான நிலைமையில் நீ இல்லை. இரண்டு குற்றங்களில் சிறந்த ஒரு குற்றத்தையே நீ ஏற்றுக்கொண்டதும் புத்திசாலித்தனமே. நீ புரிந்த குற்றங்களுக்குப் பரிகாரம் தேடலாம். ஆனல் வேறுவிதத்தில் இறங்கிவிட்டிருந்தால் அப்போது உன் நிலைமைக்காக வெட்கப்பட வேண்டியதாகத்தான் இருக்கும்,' என்று சொல்லிக்கொண்டே தன் சகோதரியை வாஞ்சையுடன் அணைத்துக்கொண்டான். பிறகு சொற்ப நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர்.

அப்போது மோகனசுந்தரம் ஹேமவதி சீமாட்டியின் சேவகனைப்போன்ற உடையை அணிந்திருக்கவில்லை. கௌரவம் பொருந்தியவர்கள் அணியக்கூடிய சாதாரண உடையையே அணிந்திருந்தான். அப்போது அவனும், ஹேமவதி சீமாட்டியின் குமாரனும் பரஸ்பரம் அருகில் நின்றுகொண்டால் புதிதாக வருகிறவர்கள் மோகனத்தைப் பார்த்தே ஹேமவதி சீமாட்டியின் குமாரன் என நினைப்பார்கள். ஹேமவதியின் மூத்தகுமாரி ராஜேஸ்வரி அங்கே இருந்திருந்தால் தன்னல் மனமாரக் காதலிக்கப்பட்ட அவன் ஒரு பெரிய அந்தஸ்துள்ளவனைப்போல் நின்றிருப்பதைக்கண்டு அளவிலா

ஆனந்தத்துடன் அவனைத் தன் மார்புறத் தழுவிக்கொண்டு கூத்தாடுவாள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

சகோதரனும் சகோதரியும் அவ்வாறு மௌனமாக இருந்தவேளையில் அச் சம்பாஷணையை வேறுவிதமாகத் திருப்பும்பொருட்டு மோகனசுந்தரம் தன் சகோதரியான சுலோசனையைக்கண்டு, 'சகோதரியே! தர்மலிங்கம் பிரபுவின் வேலைக்காரன் இன்று ஏதேனும் சமாசாரத்துடன் வருவான் என்று நினைக்கிறாயா? எனக் கேட்டான். அதற்குச் சுலோசனை, 'ஆம். அவன் வருவான் என்றுதான் நானும் எதிர் பார்க்கிறேன். சுகானந்தம் பிரபுவின் மனைவி ரங்கநாயகி யாரின் இருப்பிடம் தெரிந்துகொண்டு இங்கு வரவேண்டு மென நான் கண்டிப்பாக எழுதியிருக்கிறேன்' என்றாள். அப்போது மோகனம், 'அப்படியானால் அந்த இடம் தெரிந் ததும் நாம் மூவரும் அங்கே போகலாமா?' என்று ஆவலு டன் கேட்டான். அதற்கு அவளும், 'எனதன்புள்ள சகோதரா! நாம் மூவரும் சிறிதும் தாமதமின்றிப் போக வேண்டியதுதான். சபாபதியும் தன் தாயின் இருப்பிடத் தையறிந்து அவளை அன்புடன் அணைத்துக்கொள்ள ஆர்வத்துடன் இருக்கிறான். அவன் மனமெல்லாம் அவ ளிடத்திலேயே இருக்கிறது. இன்று தகவல் கிடைத்ததும் நாளைய தினமே புறப்படுவோம்,' என்றாள். அப்போது மோகனம், 'சகோதரியே! என் அம்மாதை நமது தாயார் என்று நீ சொல்லியிருக்கக் கூடாது?' என்றுகேட்க அவள், 'அவளே நமது தாயார் என்று ருஜுப்பிக்க முடியவில்லையே. மேலும் சபாபதியிடம் இப்போது நமது விஷயமொன்றும் சொல்லக் கூடாதென்றும் நாம் முடிவு செய்திருக்கிறோமல் லவா? ஆதலால் அவனும் சந்தேகப்படாதபடி நாம் இப்போது நடந்துகொள்ளவேண்டியது அவசியம்' என்று கூறினாள்.

அப்போது மோகனசுந்தரம், 'அம்மாதே நமது தாயார் என்பதில் சந்தேகமிருக்கக் காரணமில்லையே?' என்றதும் சுலோசனை, 'இன்று தபாலில் நமக்கு ஒரு கடிதம் வரும் என்று எதிர்பார்க்கிறேன். அதிலிருந்து நமது சந்தேகத்தை ஒருவிதமாக நிவர்த்தி செய்து கொள்ளலாமென்றே நம்புகிறேன்,' என்றாள். அவன், 'யாரிடமிருந்து கடிதத்தை எதிர்பார்க்கிறாய்?' என்று கேட்கவும் அவள், 'இரண்டு தினங்களுக்குமுன் புறா நமக்கு ஒரு கடிதத்தைக்கொண்டு வந்ததல்லவா?' என்றாள். அதற்கு அவன், 'ஓகோ! நீ கமலவதியினிடமிருந்து கடிதத்தை எதிர்பார்க்கிறாயோ?' என்றான்.

அதற்குச் சுலோசனை, 'ஆம். பச்சையப்பர் என்னையும் உன்னையும் கஷ்டத்தில் விட்டதுடன் நமது தாயாரிடம் அவன் ஒப்புக்கொண்ட கடமைகளை நிறைவேற்றி வைக்காமையால் அதைக் கமலவதிக்கு எழுதினேன். இதனால் நான் துளசிங்கம் பிரபுவுக்கு உதவி செய்ய எண்ணியதுடன், ரங்கநாயகியார் என்னும் பெயரைக் கேட்டமாத்திரத்தில் பச்சையப்பர் எத்தகைய உணர்ச்சியை அடைகிறான் என்பதை அறியவும் நினைத்தேன்' என்றதும் மோகனம், 'ரங்கநாயகியார் உண்மையில் நமது தாயாராக இருப்பாளேயாயின் அவளது பெயரைக் கேட்டமாத்திரத்தில் பச்சையப்பர் மெய் நடுங்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை' என்றான். இதற்குள் தபால்காரன் வந்ததால் இந்திராபாய் தெருவில்போய் அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு வந்தாள். தன் சகோதரனுடைய எதிரில் அவள் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்ததில் அது கமலவதியால் எழுதப்பட்டதாக இருந்ததுடன் அதில் துளசிங்கம் பிரபுவினால் அனுப்பப்பட்ட கவர் ஒன்றும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். கமலவதி பின்வருமாறு எழுதியிருந்தாள்:—

'அன்புள்ள சுலோசனாவுக்கு! நீ தெரிவித்த பதத்தை உபயோகித்ததும் அது மந்திர சக்தி வாய்ந்ததுபோல் அதிக பிரயோசனமுள்ளதாக இருந்தது. அதைத் தெரிவிப்பதற்காக நான் நமது புருஷினிடம் கடிதம் அனுப்ப விரும்பவில்லை. நான் ஒன்றும் தெரிவிக்காமல் இருந்துவிட்டாலே அப்பதம் பிரயோசனப்பட்டதாக நீ அறிந்திருப்பாய் என்றே நம்புகிறேன். துளசிங்கம் பிரபு தான் விவாகம் செய்து கொள்ளப்போகும் அவ்வழகிய பெண்மணியுடன் இன்று காலை பரிதிபுரத்துக்குப் புறப்பட்டு விட்டார். நேற்றிரவு அவர் இத்துடன் இருக்கும் கடிதத்தை என்னிடம் கொடுத்து அதை உனக்கு அனுப்பிவிடும்படி கேட்டுக்கொண்டதால் அதை அனுப்பியிருக்கிறேன். எனது காதலனை கதிர்வேலு இன்னும் இரண்டொரு தினங்களில் இங்கு வந்து விடுவார். அவர் வந்ததும் அடுத்தவாரம் எனக்கு விவாகம் நடக்கும். அதற்கு நீ கட்டாயம் வரவேண்டுமென்று கேட்க உன்னுடன் பாடசாலையில் படித்த எனக்கு உரிமை இருக்கிறது. உனது அன்புள்ள, கமலவதி.'

இந்திராபாய் துளசிங்கம் பிரபுவின் கடிதத்தைப் பிரிப்பதில் அதிக ஆத்திரப்படவில்லை. தான் செய்த உதவிக்கு நன்றிகூறி இருப்பான் என்று நினைத்தாள். ஆகவே அவள் தன் சகோதரனிடம் கதிர்வேலு என்பவன் கமலவதியின் காதலன் என்று தெரிவித்துவிட்டு அவனது அழகையும் வர்ணித்தபின்னர் துளசிங்கம் பிரபுவின் கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். அவள் படிக்கும்போதே சிரிப்பும், சந்தோஷமும், ஆச்சரியமும் கலந்த உணர்ச்சிகளைப் பெற்றதால் மோகனனும் தன் சகோதரியின்மீது சாய்ந்தவண்ணம் அக்கடிதத்தைத் தானும் படித்தான். அக்கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது வாசகர்களுக்கு இப்போது தெரிய

வேண்டியது அவசியமில்லை. அதைக்கொண்டு சகோதானும் சகோதரியும் நீண்டநேரம் சம்பாஷணை செய்வதற்குச் சௌகரியமாயிருந்தது.

சுலோசனவும் மோகனசுந்தரமும் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் சபாபதி அவ்வறையில் நுழைந்தான். சபாபதி நோயினின்றும் விடுதலையாகிச் சொஸ்த மடைந்திருந்தான். மனோபலத்தையும் தேகபலத்தையும் போதுமான அளவு பெற்றிருந்தான். ஆனால் அவன் அப்போதும் மெல்லிய தேகத்தை யுடையவனாகவே இருந்தான். முகத்தில் முன்போல அவ்வளவு களைப்பு காணப்படவில்லை. மேலும் வாசனை சோப்பினால் முகத்தைக் கழுவி யிருந்ததால் முகத்தில் நன்றாகத் தெளிவு காணப்பட்டது. அவன் உயரமானவனாகவும், அழகிய தோற்றமுடையவனாகவும், பெருந்தன்மையுடையவனாகவும் காணப்பட்டான். ஒரு சகோதரன் தன் சகோதரியிடம் எத்தகைய சகோதர வாஞ்சையுடன் இருப்பானோ அந்தமுறையில் சபாபதி இந்திராபாய் எனப்படும் சுலோசனவுக்கு 'காலை வந்தனம்' என்று மரியாதை செலுத்தியதுடன் மோகனத்துக்கும் அன்புடன் வந்தனம் செலுத்தி அவர்கள் இருவருக்கும் தான் ஒன்றுவிட்ட சகோதரன் என்பதை அவன் அப்போது அறியான்; அத்தகைய சந்தேகமும் அவனுக்கு உண்டாகவில்லை. தன்னை மீளாத் துயரத்தினின்றும் மீட்ட இந்திராபாயை அவன் தன் சகோதரியைப் போல் பாவித்தான். அதனால் அவளுடைய சகோதரனாகிய மோகனத்தையும் சகோதரன் முறையில் நேசித்தான். இது தவிர வேறு எத்தகைய பந்துத்வமும் தங்களுக்குள் இருப்பதாக சபாபதிக்குத் தெரியாது. சபாபதி அவ்வறையில் நுழைந்து வந்தனம் செலுத்தியதும் இந்திராபாய் அவனிடம் தர்மலிங்கம் பிரபுவின் வேலைக்காரன் மாணிக்கம் ரங்கநாயகி

சிமோட்டி சம்பந்தமான தகவலைத் தெரிந்துகொண்டு சொற்ப நேரத்துக்குள் வருவான் எனத் தெரிவித்தாள். மேலும் சபாபதியின் தாயார் இருப்பதாகக் கருதப்படும் அடுத்த ராஜ்யமாகிய புதுக்கோட்டைக்குப் பிரயாணம் செய்யக்கூடிய வலுவை அவன் பெற்றிருக்கிறானா என்றும் விசாரித்தாள். அதற்குச் சபாபதி தனக்குத் தக்க பலம் இருப்பதாகவும், தன் தாயைக் காணச் செல்வதென்றால் அந்த உணர்ச்சியால் ஒருவிதமான புதிய பலம் தோன்றுமென்றும் உறுதி கூறினான்.

இவ்வாறாகச் சபாபதி, மோகனம், இந்திராபாய் ஆகிய மூவரும் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு யௌவன மங்கை அழகாக அலங்கரித்துக்கொண்டு அவ்வீட்டை நோக்கி நடந்து வருவதையும், அவளை ஒரு பையன் தொடர்ந்து வருவதையும் அவ்வறையின் ஜன்னலின் வழியே கண்டார்கள். அவளைக் கண்டதும் இந்திராபாய், 'அதோ வருவது நமது கோகிலமே' என்றாள். அவள் அதைச் சொன்னதும் சபாபதியின் முகத்தில் ஒருவித ஒளி வீசிற்று. அளவிலாச் சந்தோஷமடைந்தான். சொற்ப நேரத்துக்குள் அவ்வீட்டின் தெருக்கதவும் தட்டப்பட்டது. இந்திராபாயின் அந்தரங்க வேலைக்காரியான புஷ்பவல்லி கதவைத் திறந்தாள். கோகிலமும் அவளது சகோதரனான சங்கரனும் உள்ளே நுழைந்தார்கள். கோகிலம் இந்திராபாயைக் கண்டதும் ஆண்வேடம் அணிந்துவந்து தன்னைச் சமுத்திரவிலாச மாளிகையின் சிறையினின்றும் விடுவித்தவள் என்று தெரிந்துகொண்டாள். ஆனால் சபாபதிமட்டும் தன்னுடன் சிறையிலிருந்த அதே மனிதன் என்று தெரிந்துகொள்ள அவளால் முடியவில்லை. இந்திராபாய் கோகிலத்தின் கையைப் பிடித்துக்கொண்டு, 'நீ எங்களையெல்லாம் மறந்துவிட்டாய்போலிருக்கிறது; இதோ

இருக்கும் நமது சினேகிதரை நீ அறிந்துகொள்ள முடியவில்லையா?' என்று கேட்டாள். உடனே கோகிலம் அந்த மனிதன் அவ்வளவு சௌகரியத்தையும் சுகத்தையும் அடைந்திருப்பதுகண்டு சந்தோஷமும் ஆச்சர்யமும் அடைந்தவளாய் 'ஓ, இப்போது அறிந்துகொண்டேன்' என்று புன்முறுவலுடன் கூறினாள்.

சபாபதி மரியாதையுடனும் சந்தோஷத்துடனும் கோகிலத்தின் கையைப் பிடித்துக்கொண்டு அவளது அழகைப் பார்த்து ஆச்சர்யமடைந்தவனாய், 'கோகிலம்! நாம் இருவரும் ஒரே இடத்தில் கைதிகளாக இருந்தோம். இப்போது இருவருமே விடுதலை யடைந்திருப்பதால் நாம் பரஸ்பரம் அன்பர்களாக இருப்போம் என்பதில் உனக்குத் தடை இராது. என்னுடைய சரித்திரம் மிக ஆச்சர்யமானது. அதை நீ அறியவேண்டும். நான் ஏன் இவ்வளவு கஷ்டப்பட நேர்ந்தது என்பதையும் நீ அறிந்துகொள்ளவேண்டும்' என்று கூறிக்கொண்டே அவளது கரத்தைத் தன் கண்களில் ஒத்திக்கொண்டான். அப்போது இந்திராபாய், 'கோகிலம்! நாம் தனியாகச் சில விஷயங்கள் பேசவேண்டியிருக்கிறது. ஆகையால் பக்கத்து அறைக்குப் போவோம்வா. இது உன் சகோதரன் போலும். அவன் எனது சகோதரனாகிய மோகனசுந்தரத்துடனும், நமது நண்பனாகிய சபாபதியுடனும் இங்கேயே இருக்கட்டும்' என்றாள்.

அதன்படியே இந்திராபாய் கோகிலத்தை மற்றொரு அறைக்கு அழைத்துச்சென்று அங்கு ஒரு ஆசனத்தில் இருவரும் உட்கார்ந்து கொண்டதும், உண்மையில் சபாபதி என்பது யார்? சிறையில் அடைபட்டதன் காரணமென்ன? என்னும் விவரங்களையெல்லாம் சொன்னாள். அதைக்கேட்ட கோகிலம் அளவிலா ஆச்சர்யமும், தர்மலிங்கம் பிரபுவின்

விஷயத்தில் ஆத்திரமும் அடைந்தாள். வயது சென்ற அவன் தன் சகோதரன் குமாரனை இவ்வாறு வருத்தியதுடன் மிக உத்தமியாகிய தன் கற்பையும் பலவந்தமாகக் கெடுக்க முயற்சித்ததையும் நினைத்து அக்கொடியோனைச் சபித்தாள். பண ஆசை பிடித்துத் தன் சகோதரனுடைய குமாரனை வருத்தியதையாவது பொறுத்துக்கொள்ளலாம். கேவலம் வயோதிகத் தன்மையை அடைந்துவிட்ட தர்மலிங்கம், தன் மகள் போன்ற நிலைமையிலுள்ள கோகிலத்தைக் கெடுக்க முயற்சித்தது பொறுக்க முடியாத குற்றமாகும். தள்ளாத வயதில் யௌவன மங்கையரைத் திருப்தி செய்யக் கூடிய எத்தகைய சக்தியும் இல்லாவிட்டாலும் மங்கையர்மீது காமங்கொண்டு அவர்களைக் கெடுப்பதில் எத்தகைய பாவமான காரியத்தையும் செய்யத் துணிவதை நாம் இன்றளவும் காண்கின்றோம். அப்படிப்பட்ட அயோக்கியக் கிழவர்கள், தங்கள் குமாரி மிக உத்தமியாய் இருந்தாலும் அவளையும் சந்தேகித்து வாயில் வந்தபடியெல்லாம் தூஷிக்கத் துணிகின்றனர்.

இந்திராபாய் கோகிலத்தினிடம், சபாபதி சிறையிலிருந்த போது ஒருநாள் இரவு எப்படிக் கோகிலம் இருந்த அறைக்கு வர முடிந்தது என்பதையும் விவரித்துவிட்டு இன்னும் சொற்ப தினங்களுக்குள் அவன்தான் உண்மையான பிரபுவாக விளங்கி தர்மலிங்கத்தின் சொத்துக்களையெல்லாம் பெறக் கூடிய பாக்கியத்தை அடைவான் என்றும் தெரிவித்தாள். அநீதியும் அக்கிரமமும் தோல்வியடைந்து நீதியானதும் நியாயமானதும் வெற்றிபெறப்போவதை யறிந்தும், சபாபதி தேகாரோக்கிய நிலைமையில் அதிக அபிவிருத்தியடைந்திருப்பதையும் கண்டும் சந்தோஷமடைந்தாள். மறுபடியும் இந்திராபாய், 'இப்போது சபாபதி போதுமான அளவு சௌகரியத்தையே அடைந்திருக்கிறார். அவரது தேகாரோக்கியம்

திருப்திகாமாகவே இருக்கிறது, இப்போது நாம் நமது சொந்த விஷயம் பேசுவோம். நாம் இருவரும் சினேகமான தற்கு ஏற்பட்ட சந்தர்ப்பத்தைப்பற்றி வெளியில் எங்கும் பிரஸ்தாபிக்கக்கூடாது என்று நான் வேண்டிக்கொண்டதை நீ நிறைவேற்றி வைத்ததற்காக நான் மிகவும் சந்தோஷமடைகிறேன்' என்றதும் கோகிலம், 'உன்னுடைய வேண்டுகோளின்படி நான் நடக்காமலிருந்தால் நான் நன்றிகொன்றவளாவேனல்லவா? இப்போதே இவ்வளவு நாள் கழித்து நான் இங்கு வந்ததே மன்னிக்க முடியாத குற்றமாகும். நான் சில தினங்களுக்கு முன்பே வந்து உன்னைக்கண்டு என்னை மீட்டதற்காக மற்றொரு முறை வந்தனம் கூறியிருக்கவேண்டாமா?' என்றாள்.

அப்போது இந்திராபாய், 'ஆம்; உண்மையிலேயே நீ இவ்வளவு நாள் வாராததன் காரணமென்ன? உன்னை விடுதலை செய்த இரவில் நடந்த சம்பவங்களைக் கண்டபின் இங்கு வருவதற்குத் தயங்கினாய்போலும்! அல்லது என்னுடன் மறுபடியும் சினேகம் செய்யக்கூடாதென உன் பந்து மித்திரர்கள் வற்புறுத்தினார்களா?' என்று கேட்டாள். அதற்குக் கோகிலம், 'இல்லை, என்னைப்பற்றித் தவறாக நினைக்கவேண்டாம். உன் விஷயத்தில் நான் அகௌரவமாக நினைத்ததேயில்லை. அன்றிரவு நீங்கள் செய்த ஒரு வேலையில்மட்டும் எனக்கு அதிக அதிருப்திதான். ஆயினும் அதில் நீ பங்குபெற்றிருக்கமாட்டாய் என்று நிச்சயமாக நான் நினைக்கிறேன். மேலும் உன் பேச்சு, தோரணை, பார்வை முதலியவைகளைப் பார்த்த நான் உன் விஷயத்தில் எத்தகைய கெட்ட எண்ணத்தையும் பெறவில்லை. இப்போது நீ இருக்கும் நிலைமையைப் பார்த்தால் நான்கொண்ட எண்ணமே சரியானதென்று தெரிகிறது,' என்றாள். அதைக்கேட்ட இந்திராபாய், 'ஆம்; நீ

நினைப்பது சரிதான். என்னைப்பற்றி எத்தகைய கெட்ட எண்ணமும் கொள்ளலாகாது. அன்று நான் ஆண் உடை அணிந்து வந்ததற்குத் தக்க காரணங்கள் இருக்கின்றன. ஆனால் அதையெல்லாம் இப்போது கேட்காதே. அவை என் தனிப்பட்ட இரகசியங்களாகும்' என்றதும் கோகிலம், 'பிற ருடைய இரகசியத்தை அறிவதில் நான் அதிக ஆவலைக் கொள்வதில்லை. நான் அன்று இரவு உன்னிடம் என் தாயைப்பற்றியும், கடவுள் அனுப்பி வைத்த எங்கள் குடும்ப சினேகிதரைப்பற்றியும் அதிகம் சொல்லவில்லை. அன்று நடந்த அந்த ஒரு சம்பவம் நான் மேலே பேச முடியாதபடி என்னைத் தடுத்து விட்டது' என்றாள். அதற்கு இந்திராபாய் 'நீ இவ்வளவு தாராளமாக இருப்பதுபற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன், அந்த ஒரு சம்பவம் என்னும் விஷயத்திலும் நீ என்மீது எப்படிப்பட்ட சந்தேகமும் கொள்ளலாகாது. சிப்பாய்களிடம் வேலை வாங்கும் ஒரு அதிகாரியைப் போல் நான் இருந்தேன் என்பதை கவனித்திருக்கலாம். எனக்குத் துணை செய்கிறவர்களுக்கே நான் எதையும் கொடுத்து விடுவது வழக்கம். நான் யோக்கியமான வழிகளிலே இருந்து விட்டிருந்தால் நீயும் சபாபதியும் இன்னும் அச்சிறையிலேயே இருந்திருக்க வேண்டும் அல்லவா?' என்று கேட்டதற்குக் கோகிலம், அவள் கூறிய அனைத்தும் உண்மையே எனக் கருதி சந்தோஷத்துடன் அவள் கையை அழுத்திக்கொண்டே, 'நீ உன் நிலைமையைப்பற்றி உறுதி கூறியதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். என்னை விடுவித்த விஷயமாக என் தாயாரிடம் சொன்னபோது அந்த ஒரு சம்பவத்தையும் நான் இங்கே வருவதில் எத்தகைய தடையும் கூறவில்லை. என் தாயார் நோயாளியாக இல்லாவிட்டால் அவரே நேராக இங்கு வந்து உனக்கு வந்தனம் கூறுவார். நானும் சீக்கிரத்திலேயே வாராமற்போன கார

ணம் என் தாயார் அதிக காயலாவால் படுத்திருந்து அவளை நான் கவனிக்கவேண்டிய அவசிய மிருந்ததே யாகும். நாங்கள் மிக்க கஷ்டதசையில் இருந்தோம்' என்றாள்.

அப்போது இந்திராபாய் 'இப்போது நல்ல நிலைமையில் இருக்கிறீர்கள் போலும்! அது யாருடைய உதவி' என்று கேட்கவும் கோகிலம், 'செல்வநாதர் என்னும் அன்பே உருவாய் அமைந்த ஒரு பெரியார் எங்களுக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் செய்து கொடுக்கிறார். அவர் தான் இப்போது எங்களுக்கு வேறு வீட்டையும் ஏற்பாடு செய்திருக்கிறார். அது இந்த இடத்திலிருந்து மிக்க சமீபத்தில்தான் இருக்கிறது' இன்று காலையில் என் தாயாருக்குச் சிறிது சுமாராக இருந்ததால் இனியும் தாமதம் செய்யாமல் இங்கு வந்து போவதென்று நிச்சயித்தேன். என் தாயார் நன்றாகச் சௌஸ்த மடைந்தபின் செல்வநாதருடைய உதவியால் ஏதேனும் ஒரு சிறு பாடசாலையை ஆரம்பிக்கலாமென்று இருக்கிறேன். ஆ! அந்த செல்வநாதர் எவ்வளவு நல்லவர் என்பது உனக்குத் தெரியாது. அவர் செய்யும் இவ்வளவு நன்மைகளுக்கும் நாங்கள் ஒரு வார்த்தையால் வந்தனம் கூறுவதையும் அவர் பெரிய பணக்காரர் என்று தெரிகிறது. நினைத்ததை நினைத்தபோதே செய்து விடுகிறார். என்னை நீ சமுத்திரவிலாச மாளிகையினின்றும் விடுவித்ததை நான் அவரிடம் சொன்னதிலிருந்து அவர் உன்னைக்காண ஆவலுடையவராக இருக்கிறார்,' என்றதும் இந்திராபாய், 'நான் இன்று மாலையாவது அல்லது நாளையாவது நமது ராஜ்யத்துக் கடுத்த புதுக்கோட்டைக்குப் போகப் போகிறேன். நான் திரும்பி வந்ததும் உனக்குச் சொல்லி அனுப்புகிறேன்' என்று சொன்னபோது அவ்வறையின் கதவு திறக்கப்பட்டு அதில் மோகனசுந்தரம் நுழைந்தான்.

அவன் தன் சகோதரியிடம், 'கோகிலம் இவ்விடத்தை விட்டுப் போவதற்குள் நான் உன்னிடம் ஒரு அவசரமான சமாசாரம் தனியே பேசவேண்டி யிருக்கிறது' என்றதும் அவள் தன் சகோதரன் என்ன சொல்லப் போகிறானோ என் னும் ஆச்சர்யத்துடன் கோகிலத்தினிடம் சொற்பநேரம் தான் வெளியில் போய் வருவதாகவும், அதுவரை அவள் அங்கேயே இருக்க வேணடுமென்றும் சொல்லிக்கொண்டு தன் சகோதரனுடன் அடுத்த அறைக்குச் சென்றாள். அங்கே சென்றதும் மோகனம் அவ்வறையின் கதவைச் சாத்திக் கொண்டான். அப்போது அவள், 'தம்பி' இதென்ன; இப் படி யெல்லாம் செய்கிறாய். என்னிடத்தில் என்ன விசே ஷம் சொல்லப் போகிறாய்,' என்று ஆவலுடன் கேட்டாள். அப்போது அவன் பின் வருமாறு கூறினான்:—'அந்த அறை யில் நானும் சபாபதியும் சங்கரனும் இருந்தபோதே திடீ ரென்று சபாபதி என்னை அவ்வறையின் ஒரு மூலைக்குத் தனி யாக அழைத்துச் சென்றான். தான் தன் மனதிலுள்ளதை ஒளித்து வைக்க முடியவில்லை யென்றும், அழகிய கோகி லத்தை அவன் காதலிப்பதாகவும், உன்னைக்கண்டால் மட் டும் அவனுக்குச் சகோதரவாஞ்சையே அதிகரிப்பதாகவும் அவளைக் கண்டால் காதலே அதிகரிப்பதாகவும் கூறினான்.'

இதைக் கேட்டதும் இந்திராபாய், 'சபாபதி இவ்வாறு பேசியதற்காக நான் ஆச்சர்யப்படவில்லை. அவன் கோகி லத்தை மனமாரக் காதலிக்கிறான் என்பதை நான் முன்னரே அறிவேன். அவன் அதிக காலம் வரை சிறையிலேயே, இருந்து விட்டதால் உலக விவகாரங்கள் பலவற்றில் அவன் பச்சைக் குழந்தை யென்றே சொல்லவேண்டும். ஆகவே அவன் ஏதேனும் நினைத்தால் அது இயற்கை உணர்ச்சி யாகவே இருக்கவேண்டு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

கோகிலம் வேறு யாரையேனும் மணப்பதென்று நிச்சயித்திராவிடில் அவளே சபாபதியின் மனைவி யாகும்படி செய்வதில் எனக்கும் சந்தோஷம்தான். அவளும் உத்தம குணங்களையுடைய பெண், ஆதலால் நீ சபாபதியிடம்போய் நான் அவனுடைய ஆவலைக் கோகிலத்தினிடம் தெரிவிப்பேன் என்று சொல்' என்று கூறித் தன் சகோதரனை மோகனசுந்தரத்தை அனுப்பிவிட்டாள். பிறகு அவள் கோகிலம் இருக்கும் அறைக்குள் சென்று கோகிலத்தின் கையைப் பிடித்துக்கொண்டு, 'கோகிலம்! இப்போது நான் ஒரு முக்கிய விஷயத்தைப்பற்றிப் பேசப்போகிறேன். நான் நல்லெண்ணத்துடனேயே உனக்கு அப்படிப்பட்ட கேள்வியைக் கேட்பேன் என்பதை நீ அறிந்திருப்பாய் என்றே நம்புகிறேன்,' என்று சொல்லி முடிப்பதற்குள் கோகிலம், 'அந்தக் கேள்விதான் என்ன என்பதைச் சொல் பார்க்கலாம்' என்று கேட்டாள்.

அப்போது இந்திராபாய், 'அன்புள்ள பெண்ணே! நீ யாரையேனும் விவாகம் செய்துகொள்வதாக நிச்சயித்திருக்கிறாயா? உன் மனம் எவரிடத்தும் கட்டுப்படாமல் சுதந்தரமாக இருக்கிறதா?' என்று கேட்கவும் கோகிலம் ஆச்சர்யத்துடனும் வெட்கத்துடனும், 'ஓ, இந்தக் கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லையே, ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயமாகக் கூறுவேன். என் மனம் இதுவரை யாரையும் நாடியதில்லை. சுதந்தரமாகவே இருக்கிறது,' என்றாள். அதைக்கேட்டு ஒருவாறு சந்தோஷமடைந்த இந்திராபாய், 'அப்படியானால் நான் இக்கேள்வி கேட்டதன் அபிப்பிராயத்தைச் சொல்லி விடுகிறேன். அதாவது நீ ஒரு பாடசாலையை ஆரம்பிப்பதை விட சபாபதிப் பிரபுவின் மனைவியாகிக் கோகிலம் சீமாட்டி ஆகலாமே என்பதுதான் என் அபிப்பிராயம்' என்று கூறி

ளுள். இதைக்கேட்டதும் கோகிலம் அளவுகடந்த ஆச்சர்ய மடைந்தாள். வெட்கம் அதிகமாகிவிட்டது. என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை. எதிர்காலத்தில் சௌகரியம் கிடைக்கப் போகிறது என்று தெரிந்ததும் அவளது தாய் சுகப்படலாமே என்று நினைத்துச் சந்தோஷப் பட்டாள். ஆனல் தான் ஒரு சமயத்தில் நாடகக் கம்பெனியில் நடித்தவளாயிற்றே என்பதை நினைத்ததும் அவளது நம்பிக்கையெல்லாம் மறைந்தோடிற்று. மிகவும் துக்கப்பட்டாள். நாடக மாதை உயர்ந்த அந்தஸ்திலுள்ள யாரேனும் கலியாணம் செய்துகொள்வார்களா? என்று யோசித்தாள்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல், கோகிலம் தன் மனத்தில் பலவிதமான யோசனைகளைச் செய்வதை அவளது முகக் குறியிலிருந்தே அறிந்துகொண்ட இந்திராபாய், 'கோகிலம்! உன் மனதில் தோன்றும் எண்ணங்களையாவது என்னிடத்தில் சொல்லக்கூடாதா? இப்படிப்பட்ட முக்கியமான விஷயத்தில் நீ யோசனை செய்வதற்கு என்ன இருக்கப்போகிறது,' என்று கேட்கவும், கோகிலம், 'அம்மணி! இத்தகைய சந்தர்ப்பத்தில் இப்படி திக்பிரமை தோன்றுவது சகஜம்தானே? அவ்வளவு பெரிய அந்தஸ்து எனக்குக் கிடைக்கிறதென்ருல் நான் ஆச்சர்யமும் சந்தோஷமும் அனுபவிப்பதில் குற்றமென்ன இருக்கிறது? ஆயினும் சபாபதி என்னிடத்தில் வைத்த நம்பிக்கைக்கு நான் அவருக்குத் துரோகம் செய்யமுடியாது. நான் நாடகப் பெண்ணுகச் சொற்பகாலம் இருந்தேன் என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்து விடுகிறேன்' என்ருள். இதைக் கேட்டதும் இந்திராபாய் உடனே பு[illegible] கோகிலத்தின் முகத்தை உற்றுப்பார்த்[illegible] [illegible] கபடமற்ற [illegible]ன்மையும், பரிசுத்தமும் அ[illegible] முகத்தில் காணப்பட[illegible]வ

186572.

மானம் அவள் முகத்தில் காணப்படவில்லை. இந்திராபாய் தன் சொந்த வாழ்க்கை அனுபவத்திலிருந்தே பெண்கள் மனம் வைத்தால் எப்படிப்பட்ட நிலைமைகளிலும் சந்தர்ப்பங் களிலும் அவர்கள் இருந்தாலும் கற்புடன் இருக்க முடியு மென்பதை நன்றாக அறிந்தவளாதலால் கோகிலமும் பரிசுத்த மாகவே இருப்பாள் என்று நிச்சயமாக நம்பினாள்.

சில பெண்மணிகள் சமய சந்தர்ப்பங்களை யொட்டி பல ஆடவர்களிடையிலும், மற்றும் சந்தேகப்படக்கூடிய பல துறைகளிலும் இருக்கும்போதும், இளம் வயதிலேயே விதவைகளாகி வாழ்க்கையை நடத்திவரும்போதும் பல ஆடவர்கள் அப்படிப்பட்ட பெண்கள் கற்புடன் இருக்கமுடியாது என்று முடிவுகட்டி அவர்கள்மீது குற்றம் கற்பிக்கவும் முயல்கின்றனர். ஆயினும் அப்படிப்பட்டவர்களில் ஒரு சிலரேனும் உத்தமிகளாகவே விளங்குகின்றனர் என்பதை நாம் துணிந்து உறுதி கூறமுடியும். ஆடவர்களின் இந்த சந்தேக புத்தியே பெண்களின் முன்னேற்றத்துக்கும் சந்தோஷத்துக்கும் ஒரு பெரிய தடையாக இருக்கிறது. ஒவ்வொரு ஆடவனும் தன் மனைவியைத் தவிர மற்றவர்களைச் சகோதரிகளாகப் பாவித்து நடந்தால் உலகில் தொல்லையே இராது. ஆனால் கற்றவர்களென்று சொல்லிக்கொள்ளும் ஆடவர்கள் கூட இவ்வாறு நடக்கின்றனர் எனக் கூறுவதற்கில்லை.

ஆகவே இந்திராபாய் நமது உத்தமியான கோகிலத்தைப் பார்த்து, 'நீ அவசியத்தை யொட்டியும், அப்போதிருந்த சந்தர்ப்பத்தை அனுசரித்துமே நாடகக் கணிகையாகச் சென்றிருப்பாய் என்று நம்புகிறேன்' என்றதும் கோகிலம் தன் அக்கால நிலைமைகளையும் கஷ்டங்களையும் நினைத்துக்கொண்டு துக்கம் பொறுக்கமாட்டாமல் கண்ணீர் விட்டுக்கொண்டே, 'ஆம்; தாங்கமுடியாத நிலைமையை யொட்டியே அப்பாழும்

வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. எனினும் நான் கற்பினின்றும் தவறுவதென்று முடிவு செய்திருந்தால் செல்வத்தில் மூழ்கி யிருக்கலாம். ஆனால் அதற்குச் சம்மதி யாமற் போனதால்தானே சமுத்திர விலாசமாளிகையில் சிறையிடப்பட்டேன். ஆதலால் நான் அத்தகைய தவறான முடிவுக்கு வாயில்லையென்பதை நீயே அறிந்திருக்கலாம்' என்று முகவாட்டத்துடன் கூறினாள். இதைக்கேட்ட இந்திராபாய் அவளுக்கு ஆறுதல் அளிக்கும் பொருட்டு, 'கண்மணி! நீ கற்புடையவள் என்பதை வற்புறுத்த அதிக ஆதாரங்களுடன் பேச வேண்டியதில்லை. நீ எவ்வளவு கள்ளங்கபடமற்றவள், பரிசுத்தமானவள் என்பதை உன் முகமே காண்பிக்கின்றது. நீ சபாபதியை மணந்துகொள்ளத் தகுதி வாய்ந்தவள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆயினும் இப்போதே நீ அவனைப் பார்ப்பது கூடாது. நீயும் உன் தாயாருடன் கலந்து ஆலோசிக்க வேண்டும். அவனும் விரைவில் தன் தாயாரைக் காண்பான். அவள் அபிப்பிராயத்தையும் அவன் அறியவேண்டும். நீ யாரையும் நேசிக்கவில்லை என்று நான் தெரிந்துகொண்டதே போதுமானது. நான் உன் தம்பியை அழைத்து வருகிறேன். நீ இப்படியே போய் விடு' என்றாள்.

அப்போது கோகிலமும், 'ஆம்; உனதுயோசனை பாராட்டத் தக்கதே. ஆதலால் அதன்படியே செய்கிறேன். நான் சமீபத்திலேயே குடியிருப்பதால் ஏதேனும் விசேஷம் ஏற்படும்போது நீ எனக்குச் சொல்லி அனுப்புவாய் என்று நம்புகிறேன்' என்றாள். அதற்கு இந்திராபாய், 'நாங்கள் வெளியூருக்குப் போய்த் திரும்பி வந்ததும் உனக்குத் தெரியப்படுத்துகிறேன். அல்லது நாங்கள் போகும் இடத்திலிருந்தே எழுத நேரிட்டாலும் நேரலாம். எதற்கும் நீ சபாபதியை

நேசிப்பாயல்லவா?' என்று கேட்க, கோகிலம், 'நாங்கள் இருவரும் சந்தித்த நிலைமையையும், பிறகு நடந்த சந்தர்ப்பங்களையும் கவனிக்கும்போது நான் அவரை நேசியாமலிருக்கமுடியாது. அவர் என்னை நேசிக்கிறார் என்று தெரிந்ததும் என் மனம் அதிக சந்தோஷமடைந்தது. ஆயினும் அவரால் நேசிக்கப்படத் தக்க யோக்கியதை எனக்கு இருக்கிறதா என்பதே இப்போதைய கேள்வி,' என்று சொல்லி முடிப்பதற்குள் இந்திராபாய், 'சரி, சந்தோஷம். நீ அவனை நேசிக்கிறாய் என்று தெரிந்துகொண்டேன். நீ ஏதோ சொற்ப காலம் நாடகக் கணிகையாக இருந்ததால் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அது உங்கள் ஒற்றுமைக்கு எவ்விதத்திலும் தடையாக இருந்துவிட முடியாது. சபாபதி களங்கமற்ற முறையில் உன்னை நேசிக்கிறான். நாம் இருவரும் சந்தித்துப் பேசியதை நான் சபாபதியிடம் கூறுகிறேன். ஏதோ அவசியத்தையொட்டி நீ நாடகத்தொழிலில் ஈடுபட்டதை அவன் கேவலமாகக் கருதிவிடமாட்டான் என்றே நம்புகிறேன்' என்றாள்.

இவ்வாறு பேசி முடிந்தபின் கோகிலம் இந்திராபாயின் அனுமதியைப் பெற்றுத் தன் சகோதரன் சங்கரனுடன் அவ்வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்றாள். இந்திராபாயும், தன் சகோதரனும் சபாபதியும் இருந்த இடத்துக்குச் சென்று சபாபதியிடம் எல்லா விஷயங்களையும் விவரித்துக் கூறினாள். அன்றையதினமே சில மணி நேரத்துக்குப்பின்னர் தர்மலிங்கம் பிரபுவின் சேவகன் மாணிக்கம் அங்கு வந்தான். அவன், 'தர்மலிங்கம் பிரபு இன்னமும் காயலாகவே படுக்கையில் இருக்கிறார். அவரும், வீரபாலய்யாவும், மங்களமும் இன்னது செய்வதென்று தோன்றாமல் குழப்பமாகவே இருக்கிறார்கள். அவர்கள் சபாபதி ஓடிப்போன விஷயமாய் அதிக

கவலைகொண்டிருக்கின்றனர். ஆயினும் சபாபதி தானே சுகானந்தம் பிரபுவின் குமாரன் என்று ருஜுப்படுத்துவது கஷ்டம் என்று வீரபாலய்யா மங்களத்தினிடம் சொல்லிக்கொண்டிருந்தபோது நான் கேட்டேன்,' என்றதும் இந்திராபாய், 'அதெல்லாம் சரிதான். ரங்கநாயகிச் சீமாட்டி வசிக்கும் இடத்தைக் கண்டு பிடித்தாயா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'அம்மா! அந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆயினும் அது சம்பந்தமான ஒரு உளவு கண்டு பிடித்திருக்கிறேன். தர்மலிங்கம் பிரபு தனது இரகசிய தஸ்தாவேஜுகளை வைக்கும் மேஜை ஒன்றைத் திறந்து பார்த்தேன். அதில் அரண்மனைக்காரத் தெருவிலுள்ள இரண்டு வக்கீல்கள், தாங்கள் ரங்கநாயகிச் சீமாட்டியாருக்கு புதுக்கோட்டையைச் சேர்ந்த ஒரு ஊருக்குப் பணம் அனுப்பிவிட்டதாக எழுதியிருக்கிறார்களே யொழிய அந்த ஊரின் பெயரை எழுதவில்லை. அந்த வக்கீல்களின் பெயரை இதோ எழுதிக்கொண்டு வந்திருக்கிறேன். பார்,' என்றான். அப்போது அவள், 'அம்மட்டுமாவது தெரிந்தது சந்தோஷப்படத் தக்கதே,' என்று கூறிக்கொண்டே அவன் எழுதிக்கொண்டு வந்த வக்கீல்களின் பெயரைப் பார்த்ததும் மனமோகனரும் தேவிதாசரும் என்று இருந்ததைக்கண்டு, 'ஆ, இது போதும். இதைக்கொண்டே நான் விஷயங்களைக் கண்டு பிடித்து விடுவேன். நீ இங்கு வந்து போவதன் சம்பந்தமாய் எத்தகைய சந்தேகமும் ஏற்படாதபடி சர்வ ஜாக்கிரதையுடன் நடந்துகொள்கிறாய் அல்லவா?' என்று கேட்டாள்.

அதற்கு மாணிக்கம், 'நான் மிக ஜாக்கிரதையாகவே நடந்து வருகிறேன். என் ஜீவனம் இனி எப்படிக் கழியும் என்பதில் நான் கவனம் செலுத்தவேண்டாமா? ஆகவே

பட்டிருக்கிறது. அப்படியும் ஒருமாது இருக்கிறாளா? இருக்கட்டும். தேவிதாசரே! இப்போது என்ன செய்வது?' என்று கேட்டார். உடனே தேவிதாசரும், 'செய்வதென்ன? அவளைச் சந்தித்துப் பேசுவோம்' என்றார். ஆகவே மனமோகனர் குமாஸ்தாவிடம் அம்மாதை உள்ளே அனுப்பும்படி தெரிவித்தார்.

குமாஸ்தா அவ்வறையை விட்டுச் சென்றதும் தேவிதாசர், 'ஐயா, மனமோகனரே! அவளை நீர் முன்னமே அறிந்தமாதிரி காட்டிக் கொள்ளாதீர்கள். நீர் தவறுதலாக ஆளைக் குறித்துக்கொண்டிருக்கலாம்' என்றதும் அவர், 'இல்லவே இல்லை. இவள் தான் நம்மைக் கொள்ளை யடித்தது என்பதில் சந்தேகமே இல்லை. இதில் சந்தேகப் படுவதாயின் என் கண்களையே நான் நம்ப முடியாமற்தான் போகவேண்டும்' என்று கூறி முடிப்பதற்குள் அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சந்திராபாய் என்னும் நமது இந்திராபாய் நுழைந்தாள். அவள் அழகிய ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு பெரியமனிதர் வீட்டைச் சேர்ந்த மாதைப்போல் காணப்பட்டாள். அவள் அழகும் யௌவனமும் பெருந்தன்மையும் வாய்ந்தவளாக இருந்தாள். அவளுடைய ஒவ்வொரு அங்கமும் அவளது அழகு அதிகரிக்கும்படியே செய்தது. அவள் அறையில் நுழைந்ததும் வக்கீல்களைக் கண்டு சிரிக்கவே அவளது முத்துப்போன்ற வெண்மையான பற்கள் பிரகாசித்தன.

அவளது குறும்பான சிரிப்பைக் கண்ட மனமோகனர் கண்டிப்பான முறையில் இருக்க முடியாமல் வேடிக்கையில் இறங்கி அவளைப்பார்த்துச் சிரித்தார். அதனால் தேவிதாசரும் உபசாரமாகவேனும் சிரிக்க வேண்டியதாயிற்று. இவர்கள் இருவரும் சிரித்ததால் தான் சும்மா இருக்கக்கூடா

தென்று நினைத்த இந்திராபாய் வேண்டுமென்றே உரத்த சத்தத்துடன் கலகல வென்று சிரித்தாள். இவ்வாறு இவர்கள் சிரிப்பதை அடுத்த அறையில் இருந்த குமாஸ்தாக்கள் கேட்டு யாரோ ஒரு விசித்திரமான கட்சிக்காரர் வந்திருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். மனமோகனர் அம்மாதைப் பார்த்து, 'மாதே! ஒரு ஆசனத்தில் உட்காரு; உன்னை நான் நாகபுரி வழக்கில் ஈடுபட்ட பிரபலமான சந்திராபாய் என்று அழைக்கலாமோ?' என்றார். அப்போது இந்திராபாய் மிகக் கண்டிப்பாக இருப்பவள்போல், 'நீங்கள் எவ்வாறு என்னை அழைப்பதைப்பற்றியும் எனக்குக் கவலை இல்லை. நான் யார் என்று வேண்டுமாயினும் நீங்கள் நினைத்துக் கொள்ளலாம். ஆயினும் நான் இப்போது ஒரு முக்கிய வேலையாக இங்கு வந்திருப்பதால் நீங்கள் நாகபுரி சம்பவத்தை இப்போது ஒரு முக்கிய வேலையாக இங்கு வந்திருப்பதால் நீங்கள் நாகபுரி சம்பவத்தை இப்போது மறந்து வந்த வேலையைக் கவனிப்பதே நலம்' என்று உறுதியுடன் கூறினாள்.

அப்போது மனமோகனர், 'சரி, இப்போது நாம் அதை மறந்து விடுகிறோம். ஆனால் நீ வந்த முக்கிய வேலைதான் என்ன? இன்று இரவு நடுநிசிக்குமேல் எங்கேயாவது ரஸ்தாவில் உன்னைச் சந்திக்க வேண்டுமென்று கட்டளையிட வந்தாய் போலும்' என்று மீண்டும் பரிகசித்தார். இந்திராபாய் அதிக கோபமடைந்தவள்போல், 'இவ்வாறு பரிகாசம் செய்வதென்றால் நானும் எவ்வளவு மணிநேரம் வேண்டுமாயினும் பேசிக் கொண்டிருப்பேன். ஆயினும் வந்த வேலையைக் கவனித்துக்கொண்டு போவதே நலம் என்று நான் நினைக்கிறேன். ஆதலால் நீங்கள் காரியத்தைக் கவனிக்கப் போகிறீர்களா? அல்லது வேடிக்கையில் காலத்தைப் போக்கப் போகிறீர்களா' என்று பரபரப்புடன் கேட்கவும் தேவி

தாசர் தமது கூட்டாளியாகிய மனமோகனரிடம், 'ஐயா, நாம் பழைய விஷயங்களை யெல்லாம் மறந்து இப்போது அம்மாது வந்த வேலையைக் கவனிப்போம். வீண் காலதாமதம் வேண்டாம்' என்று சொன்னார். அப்போதும் மனமோகனர், 'சரி, அம்மாதை அநாவசியமான கேள்விகளைக் கேட்க நான் விரும்பவில்லை. அவள் யாராகவேனும் இருக்கட்டும். நாம் அவளைத் தேடிச்சென்று அதனால் ஏற்பட்ட நஷ்டத்தை நமக்குத் திருப்பிக்கொடுக்கும் பெருந்தன்மையான எண்ணத்துடனேயே அவள் வந்திருப்பாளென்று நம்புகிறேன்' என்று கிண்டலாகப் பேசினார்.

அச்சமயம் இந்திராபாய் மனமோகனரைப் பார்த்து, 'ஐயா, நீர் அநாவசியமாக அளவு கடந்து வீண் பேச்சுப் பேசுகிறீர்கள்' கண்டித்துப் பேசவே, தேவிதாசர் தன் நண்பரிடம், 'ஐயா! அம்மாதின் வேலையைக் கவனிப்போம், வீண் வம்புகளை இப்போது இழுத்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்? உங்கள் குறும்புகளை விட்டு விடுங்கள்' என்றதும் மனமோகனர், 'அப்படியானால் சரி, அம்மாதின் விவகாரத்தை நீங்களே கவனியுங்கள். நான் அமைதியாக இருந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்லி விட்டார். எனவே தேவிதாசர் அம்மாதைப் பார்த்து, 'அம்மணி! நீ வந்த வேலையைச் சொல். அதைக் கேட்டு மேற்கொண்டு நடக்க வேண்டியதைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்' என்றதும், இந்திராபாய், 'ஐயன்மீர்! நான் சுகாநந்தம்பிரபுவின் மனைவியாகிய ரங்கநாயகிச் சீமாட்டியின் சிநேகிதை என்று முதலில் தெரிவித்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது' என்று சொல்லி முடிப்பதற்குள் எதிரில் இருந்த மனமோகனர், 'ஓஹோ! அச்சீமாட்டி உனக்கு எப்படித் தெரியும்? நடுஇரவில் ஏதே

னும் ரஸ்தாவில் சந்தித்தாயோ ?' என்று கேட்கவும் தேவி தாசர், 'நண்பரே! அவ்வாறெல்லாம் இடையிடையே பேச வேண்டாம். நமது காலம் வீணுகக் கழியலாகா தல்லவா ?' என்று கூறி விட்டு இந்திராபாயைப் பார்த்து, 'அம்மணி! அச் சீமாட்டி உனக்கு அறிமுகமானவர் என்று சொன்னுய். பிறகு என்ன சங்கதி ?' என்று கேட்டார்.

அதற்கு 'இந்திராபாய், 'ஐயா, நீங்கள் சமீபத்தில் அச் சீமாட்டிக்கு அவள் தங்கியிருக்கு மிடத்துக்குப் பணம் அனுப்பினீர்க ளல்லவா? என்று கேட்டாள். அப்போது தேவிதாசர், 'ஆம்; அனுப்பினேம். அதைப்பற்றி என்ன சொல்லப் போகிறுய்? என்று ஆவலுடன் கேட்டார். அப் போது அவள் மிகச் சாமர்த்தியமாக, 'நீங்களோ அல்லது உங்கள் குமாஸ்தாக்களோ செய்த தவறுதலினுல் நீங்கள் விலாசம் தவறுக எழுதிவிட்டதால் ரங்கநாயகிச் சீமாட்டிக்கு அத்தொகை குறிப்பிட்ட வேளையில் சேராமல் அம்மாது பாவம், கஷ்டப்பட்டாள்.' என்று உண்மையாகப் பேசுபவள் போன்ற தோரணையில் பேசினுள். அதனுல் அவ்வாறு அவள் கூறியதில் யாவருக்கும் எத்தகைய சந்தேகமும் ஏற்பட வில்லை. அப்போது மனமோகனர் ஆத்திரத்துடன் எழுந்து, 'விலாசம் எழுதுவதில் தவறு செய்து விட்டோமா? ஒரு காலும் இல்லை. நானே விலாசம் எழுதியதால் அதைத் தவறு என்று கூற முடியவே முடியாது. பல வருஷங்களாக மூன்று மாதத்துக்கு ஒருமுறை வீதம் எழுதிவரும் விலாசத்தில் நான் தப்பு எழுதி விட்டதாக என்னிடமே நேரில் சொல் வது எனக்கு அவமான மல்லவா ?' என்று படபடப்புடன் கூறினர்.

அப்போது இந்திராபாய், 'இதற்காக நீங்கள் இவ்வளவு ஆத்திரப்படுவதேன் என்பது எனக்குத் தெரியவில்லை. நான்

வம்பு அளப்பதற்காக இங்கு வரவில்லை. ரங்கநாயகிச் சீமாட்டியார் எனக்குக் கடிதம் எழுதி உங்களைச் சந்தித்து, இனிமேலாவது விலாசம் சரியாக எழுதும்படி சொல்லச் சொல்லியிருக்கிறார். அதற்காகவே நான் இங்கு வந்தேன்' எனச் சொன்னதும், மனமோகனர் ஒரு துண்டுக்கடிதத்தை எடுத்து அம்மாதின் பக்கமாகப் போட்டு, 'நீதான் அந்த விலாசத்தைச் சரியாக எழுது பார்க்கலாம். அப்போதாவது நான் திருத்திக்கொள்வேன்' என்றார். அப்படிப்பட்ட சமயத்திலும் இந்திராபாய் விட்டுக் கொடுக்காமலும் அதைரியப்படாமலும் சாமர்த்தியாக, 'நான், என் எழுதவேண்டும்' நீங்களே எழுதினால் நான் வேண்டுமாயின் அதைத் திருத்திக் காண்பிக்கிறேன்' என்றாள். அப்போது மனமோகனர், 'சரி, அப்படியே ஆகட்டும். ஆனால் நீ சொல்லும் தீர்பையே நான் ஒப்புக்கொண்டுவிட முடியாது. நீ திருத்திய பிறகு நான் தபாலாபீஸ் அட்டவணையை அதாவது டைரெக்டரியைப் பார்ப்பேன்' என்று கூறிக்கொண்டே ஒரு காகிதத்தில் ஏதையோ எழுதி, 'இதோ பார்' இதில் எப்படி எழுத்துப் பிழை இருக்க முடியும்' என்றதும் இந்திராபாய் தான் வந்த காரியத்தில் ஜெயித்து விட்டதாகச் சந்தோஷ மடைந்தவளாய் எட்டிப் பார்த்தாள். அதில் 'கோட்டாறு, புதுக் கோட்டை' என்று இருந்தது. அப்போது இந்திராபாய், 'இது தவறுதான் கோட்டார் என்று இருக்கவேண்டும்' என்றாள். மனமோகனர், 'இல்லவே இல்லை. நீ சொல்வது தான் தப்பு. நாம் அட்டவணையைப் பார்ப்போம்' என்று சொல்லிக்கொண்டே அதைக்கொண்டு வந்தது பார்த்ததில் கோட்டாறு என்றுதான் இருந்தது அப்போது மனமோகனர் தானே வெற்றி யடைந்தவராய், 'நன்றாகப் பார். யார் தவறு? யார் சரி என்பது தெரிந்து விடும்' என்றார்.

இந்திராபாயும் அதைப்பார்த்துவிட்டு, 'நீங்கள் சொன்னதுதான் சரி என்று ஒப்புக்கொள்கிறேன். உண்மை இவ்வாறு இருக்கும்போது ரங்கநாயகிச் சீமாட்டி அவ்வாறு எனக்கு எழுதியதன் காரணமென்ன? அவ்வம்மையார் ஏதோ தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று உண்மையிலே ஆச்சர்யப்படுபவள்போல் நடித்தாள். மனமோகனரும், 'அக் கடிதத்தைக் கண்டதும் நீ இங்கு ஓடி வருவதற்கு முன்பாக டைரெக்டரியைப் பார்த்திருக்கக்கூடாதா? ஆத்திரப்பட்டுக்கொண்டு எங்களுக்குப் பாடம் கற்பிக்க வந்துவிட்டாயே!' என்று கேட்டார். சந்திராபாய் என்று சொல்லிக்கொண்ட அந்த இந்திராபாய், 'நான் தவறுதலாக உங்கள் விஷயத்தில் தலையிட்டதற்காக மன்னிக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே அவ்வறையை விட்டுப் புறப்பட்டுச் சென்றாள். அப்போது மனமோகனர். 'அவள் வந்ததும் போனதும் ஆச்சர்யமாகவே இருக்கிறது. இதற்காக அவள் வந்திருப்பாளென்று நான் நினைக்கவில்லை' என்றதும் தேவிதாசர், 'வேறு என்ன காரணம் இருக்கப்போகிறது' என்று சொன்னார். பிறகு இருவரும் சொற்பநேரம் மௌனமாக இருந்தனர்.

அரைமணி நேரத்துக்குப்பின்னர் மீண்டும் வக்கீல்களின் அறை திறக்கப்பட்டு குமாஸ்தா உள்ளே வந்து தினகரம் பிரபு வந்திருப்பதாகத் தெரிவிக்கவும் அவனை அனுமதிக்கும்படி வக்கீல்கள் சொன்னார்கள். உடனே தினகரம் பிரபுவும் மிகவும் களைப்படைந்தவன்போல் தளர்ந்த நடையுடன் உள்ளே புகுந்தான். அவன் ஒரு பிரபுவின் குடும்பத்தைச் சேர்ந்தவனாதலால் அவனை மரியாதையுடனேயே வரவேற்றார்கள். அவனும் ஒரு ஆசனத்தில் அமர்ந்தான். அவனுடன் இரு வக்கீல்களும் சேர்ந்துகொண்டு ஏதோ வம்பு பேச

லானார்கள். அப்போது அவன், 'ஐயன்மீர்! நான் அதிக அவசரமாகப்போய் ஒரு நண்பனைச் சந்திக்கவேண்டியிருப்ப தால் உடனே என் வேலையை முடித்து அனுப்புங்கள்' என் றான். மனமோகனர் அவனைப்பார்த்து, 'எந்த நண்பனை நீ சந்திக்கவேண்டும்' என்று கேட்கவும் தினகரன், 'சந்திரசேக ரம் பிரபுவைத்தான். வேறு யார் எனக்கு அவ்வளவு உற்ற தோழராக இருக்கிறார்கள்' என்றான். உடனே மனமோக னர், 'ஐயா! நீ அப் படுபாவியுடன் உன் சிநேகத்தைக் குறைத்துக்கொள்ளக் கூடாதா? அவன் பெருத்த போக்கிரி என்றும், அநாவசியமாக ஒரு ஆளுடன் துப்பாக்கிச் சண்டை போட்டதாகவும் வதந்தி இருக்கிறதே. நீ பூராவாக அவ னுடைய சிநேகத்தை விட்டுவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஏனெனின் அவனுடைய சகோதரியை நீ விவாகம் செய்துகொள்ளப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆயினும் அவனுடன் அதிகம் நெருங்காமல் இருந் தால் அதுவே போதுமானது' என்றான்.

இதைக்கேட்டதும் அதிக ஆத்திரமடைந்த அவன், 'நான் இரவெல்லாம் தூங்காமல் விழித்ததால் என் மண்டை பிளந்து போவதுபோல் தலைவலி அதிகமாய் இருக்கிறது. நான் எங்கேயாவது வெளியே போகட்டும். என் விவகாரங் களை உடனே முடித்து விடுங்கள்' என்றதும் மனமோகனர், 'உனது தாயார் ஹேமவதி சீமாட்டியும், மற்றொரு கார்டிய னாக பஞ்சநதம் பிரபுவும் உன் கடனைத் தீர்ப்பதற்கு ஏற் பாடு செய்யும்படி சொன்னார்கள். நாங்களும் அவ்வாறே செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனால் சிற்சில கடன்கள் விஷயத்தில் நீ விவரம் தெரிவிக்கவேண்டும். அப்போது தான் நாங்கள் அவர்களிடம் சென்று சற்று குறைவான தொகையை வாங்கிக் கொள்ளும்படி செய்யலாம்' என்றார்.

அப்போது அவன், 'ஓஹோ! அது முடியவே முடியாது. பிறகு என்னை யாரும் நம்பமாட்டார்கள். நான் வாங்கிய கடனில் ஒரு ரூபாய்க்கு பன்னிரண்டு அணுதான் கிடைக்கும் என்று தெரிந்தால் பிறகு எனக்கு யாரும் கடனே கொடுக்க மாட்டார்கள். அதிலும் முக்கியமாக அந்த மார்வாரியிடம் வாங்கிய கடன் விஷயத்தில் நீங்கள் தலையிடவே முடியாது. அது என்னுடைய சினேகிதை ஒருத்தி சிபார்சு செய்து அதன் மீது வாங்கப்பட்டது' என்றான். உடனே மனமோகனர், 'சினேகிதையா! அந்தப் பெண் யார்? உனக்கும் அவளுக்கும் என்னவகையில் 'சினேகம்?' என்று பல கேள்விகளைக் கேட்டதும் தினகரன், 'சாதாரண சினேகம்தான் நீங்கள் அவ்விஷயத்தி லெல்லாம் தலையிடலாகாது. அவர்களுடைய கடன்களுக்கெல்லாம் என்ன சொல்லப் போகிறீர்கள்?'

மனமோகனர், 'உன் சொந்த விஷயத்திலும் தலையிட்டு உன்னைத் திருத்த கார்டியன்களாகிய எங்களுக்கு உரிமையுண்டு. ஆயினும் உன் தாயாரும் மற்றொரு கார்டியனும் அது விஷயத்தில் அதிகமாகக் கவனம் எடுக்காமையால் நானும் அதிகம் தலையிட விரும்பவில்லை. ஆயினும் அவன் கடன்களை நன்றாகப் பரிசீலனை செய்துதான் ஆகவேண்டும். அவனிடம் ஐயாயிரம் பவுன் கடன் வாங்கியது உண்மை தானா? மார்வாரிகளிடம் குறைந்த தொகையை வாங்கிக் கொண்டுதானே அதிக தொகைக்குப் பாண்டு எழுதுவது வழக்கம். நீ உண்மையில் எவ்வளவு வாங்கினாய்?' என்று கேட்டார். தினகரம் பிரபு, 'ஐயா, நான் மூவாயிரம் பவுன் தான் வாங்கினேன். மற்றும் ஆயிரம் பவுனுக்கு அவரிடமே சில சாமான்கள் வாங்கினேன். ஆனால் அவை உபயோகமற்றவைகளாக இருந்ததால் அவற்றைக் குப்பையில் போட்

டேன். மற்ற தொகையெல்லாம் வட்டிக்காகவும் இதர கணக்குகளுக்காகவும் பிடித்துக்கொண்டதுதான். ஆயினும் அவனுக்குத் தொகையைக் குறைக்காமல் அப்படியே கொடுத்துவிட வேண்டியதுதான்' என்று கூறினன். அதற்கு மனமோகனர், 'இதுமட்டுமா? இன்னும் பல கணக்குகளும் தகாறுகவே இருக்கின்றன. ஒரு பெரிய குடும்பத்தைச் சமாளிப்பவன்கூட இவ்வளவு அதிகமாகச் செலவு செய்ய மாட்டானே! அவ்வளவு அதிகமான துணிமணிகளையும் சாமான்களையும் வாங்கியிருக்கிருயே?' என்று கேட்டார்.

அப்போது தினகரன், 'அதற்கென்ன செய்வது? நீங்களும் பஞ்சநதம் பிரபுவும் சேர்ந்துகொண்டு என் செலவுக்கு வேண்டிய அளவு பணத்தைக்கொடுக்காமல் போனதால் நான் அப்போதைக் கப்போது பற்பலரிடமும் கொஞ்சங் கொஞ்சமாகக் கடன் வாங்கும்படி நேரிட்டது. அது பல துளி பெரு வெள்ளம் என்பதுபோல் பெருகிவிட்டது' என்றுன். அதைக்கேட்ட மனமோகனர், 'ஓ, அப்படியானல் நமது நகரிலுள்ள எல்லா தனவந்தர்களும் உனக்கு நினைத்த போதெல்லாம் கடன் கொடுப்பார்கள் போலிருக்கிறதே!' என்று பரிகாசமாகப் பேசினர். அதற்கு அவன், 'ஆம்; அப்படித்தான் கொடுப்பார்கள். என்னை விசாரிக்கவேண்டிய விஷயங்களை யெல்லாம் விசாரித்து விட்டீர்களா?' என்று கேட்கவும், அவர் தமது கூட்டாளியாகிய தேவிதாசரைப் பார்த்து, 'ஐயா, நாம் இன்னும் அதிகமாக இவ்விஷயத்தில் தலையிடுவதற்கில்லை. என்ன செய்வது?' என்று கேட்கவும தேவிதாசர், 'நாம் நினைத்தபடி இந்த விவரணம் இல்லை. கண் மண் தெரியாதபடி தினகரன் கடன் செய்துவிட்டிருக்கிறுன். எனினும் இம்முறை இக் கடன்களைத் தொலைத்து விடுவோம்' என்று கூறியதும், மனமோகனர் தினகரனிடம், 'அப்பா,

இப்போது உன் கடன்களை இப்படியே தீர்த்துவிடுகிறோம். ஆனால் இனி நீ ஜாக்கிரதையாகக் கடன் வாங்கவேண்டும். உனக்கு மைனர் நீங்கும்வரை மாத அலவன்சு இன்னும் சிறிது அதிகமாகக் கொடுப்போம்' என்று சொல்லி முடித்தார்.

அதைக் கேட்டுக்கொண்டபின்னர் தினகரம் பிரபு அங்கிருந்து வெளியேறினன். பிரபல வக்கீல்களான மனமோகனரையும் தேவிதாசரையும் விட்டு வாசகர்கள் இவ்வளவு விரைவில் விலகிவிடமுடியாது. தினகரம் பிரபு வெளியேறிய சிறிதுநேரத்துக்கெல்லாம் மறுபடியும் அவ்வறையின் கதவு திறக்கப்பட்டு ஒரு வயோதிகர் உள்ளே வந்தார். அவர் தனது பெயர் செல்வநாதர் என்று சொல்லிக்கொண்டார். அவர் அவ்வறையில் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்ததும், 'ஐயன்மீர்! நீங்கள் இருவரும் ஹேமவதி சீமாட்டியின் குடும்ப வக்கீல்கள்தானே?' என்று கேட்க, மனமோகனர், 'ஆம்' என்று பதில் கூறவும் செல்வநாதர், 'அப்படியானல் நான் சொல்லப்போவதை நீங்கள் மிகக் கவனமாகக் கேட்கவேண்டும். சமீபத்தில் சந்திரசேகரம் பிரபுவுக்கும் மற்றொரு மோகனதாஸ் என்பவனுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டதை நீங்கள் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கலாம். அதில் அந்த மோகனதாஸின் விஷயத்தில் எனக்கு அதிக அக்கரை உண்டு,' என்று சொல்லி முடிப்பதற்குள் மனமோகனர், 'ஆம், நான் அவனை ஒருமுறை ஹேமவதி சீமாட்டியின் வீட்டில் பார்த்ததாக ஞாபகத்தில் இருக்கிறது. அவன் அச்சீமாட்டியினிடம் அயோக்கியத்தனமாக நடந்துகொள்ளும்வரை அவன் அச் சீமாட்டியின் பெண்களுக்கு ஏதோ பாடம் கற்றுக்கொடுத்தானல்லவா?' என்று கேட்டார்.

அப்போது செல்வநாதர், 'உமது பேச்சை நிறுத்தும்.

அது விஷயமாகப் பேசுவதற்காகவே இப்போது நான் வந்திருக்கிறேன். அவன் அயோக்கியத்தனம் செய்யவில்லை. ஹேமவதி சீமாட்டிதான் அவன்மீது வீண் பழி சுமத்திவிட்டாள்' என்று சொன்னபோது மனமோகனர், 'செல்வநாதரே! நீர் இவ்வாறு பேசுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. அச்சீமாட்டி எங்களுடைய கட்சிக்காரர் என்பது உங்கள் ஞாபகத்தில் இருக்கட்டும்' என்றார். அப்போது செல்வநாதர், அதற்காகத்தான் நானும் இங்கே வந்தேன். சீமாட்டி பகிரங்கப்படுத்தியிருப்பது போன்ற தீயசெயலைச் செய்யக்கூடியவனல்ல என் நண்பன் மோகனதாஸ். அவள் அவனை இருவிதமாக நஷ்டப்படுத்தியிருக்கிறாள். அவளால் அவனுக்கு ஒரு அபகீர்த்தி ஏற்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, அவளுக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் அவனைப்பற்றித் தவறான புகார் செய்து அவனை வேலையிலிருந்து விலக்கிவிடும்படி சொன்னதால் பணவருவாய் நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. எனினும் அவன் தன் சொந்த உழைப்பினால் தக்க வருவாயை அடைந்து கொண்டுதான் இருக்கிறான். அப்படி அவனுக்குத் தொழில் இல்லையென்றாலும் நான் என்னால் இயன்ற உதவியை அவனுக்குச் செய்யக் காத்திருக்கிறேன். எனினும் மனிதனுக்கு முக்கியமாக வேண்டியது நற்குணமல்லவா? அதற்கே இப்போது அவதூறு ஏற்பட்டிருக்கிறதே. எப்படியிருந்தாலும் மோகனதாஸுக்கு நீதி கிடைக்கும்படி என்னால் இயன்றதையெல்லாம் செய்வேன் என்பது நிச்சயம்' என்று கூறினர்.

அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மனமோகனர், 'அப்படியானால் நீர் அந்த மோகனதாஸின் சார்பாக ஹேமவதி சீமாட்டியின்மீது வழக்குத் தொடரப் போவதாக மிரட்டுகிறீரோ?' என்று கேட்கவும் செல்வநாதர், 'ஆம்; நட

வடிக்கை எடுத்துக்கொள்வதில் சந்தேகமே இல்லை. மோகன தாஸின் நற்பெயரைக் காக்கவேண்டுமாயின் வேறு வழியில்லை. நான் சீமாட்டியையே நேரில்கண்டு அதற்கு ஏதேனும் பரிகாரம் செய்யும்படி கேட்டதற்கு அவள் ஒத்துக் கொள்ளவில்லை. அந்தரங்கமாகவே சமாதானம் செய்து கொள்ள சீமாட்டி ஒப்பியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அவள் மறுத்து விட்டாள், ஆயினும் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள நானே மோகனதாஸை விரும்பாததால்தான் இப்போது இங்கு வந்தேன். நீங்களாவது இதில் தலையிட்டு அச்சீமாட்டி கோர்ட்டுக்கு இழுக்கப் படவேண்டிய அவசியம் நேராதபடி செய்வீர்களென்று நம்புகிறேன்' என்று கூறினார்.

அப்போது மனமோகனர், 'அப்படியானால் மனமோகன தாஸ் அச்சீமாட்டியின் மீது என்ன குற்றம் சுமத்துகிறான்?' என்று கேட்டதற்குச் செல்வநாதர், 'அச்சீமாட்டியே தன்னிடம் காதல் வார்த்தைகளைச் சொன்னதுடன் சொற்களுக்குத் தக்கபடி நடிக்க ஆரம்பித்ததாகவும் மோகனதாஸ் கூறுகிறான். மேலும் ஹேமவதி கல்யாணம் செய்துகொள்ள முடியாதாகையால் மோகனதாஸின் கள்ளக் காதலியாக இருப்பதாகவும் கேட்டுக் கொண்டாளாம்' என்று சொன்னதும் மனமோகனர், 'ஐயா, செல்வநாதரே! நீர் இவ்வாறு பேசுவதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது. நானும் எனது கூட்டாளியும் அச்சீமாட்டியின் கணவன் இறந்தது முதலே அவளை அறிவோம். நாங்கள் பார்த்த வரையில் உயர் குடும்பத்தைச் சேர்ந்த மாதர்களில் பெருந்தன்மையாகவும் கௌரவத்துடனும், பரிசுத்தமாகவும், தாராள நோக்கத்துடனும் இருப்பவள் இந்த ஹேமவதி சீமாட்டி ஒருத்தியே என்று நாங்கள் எவரும் துணிந்து கூறுவோம்' என்று சொன்னார்.

அதற்குச் செல்வநாதர், 'வெளிவேடத்தைக் கண்டு ஒருவருடைய குணத்தை நிர்ணயித்துவிட முடியாது. அது போல ஹேமவதியும் இவ்வளவு வருஷ காலமாக உங்களைப் போன்றவர்களின் முன்னிலையில் யோக்கியமானவளைப்போல் நடித்திருக்கலாம். ஆனால் இந்த விஷயத்தில் மட்டும் சீமாட்டி தாங்க முடியாத காமஉணர்ச்சியால் தவறுசெய்து விட்டிருக்கிறாள் என்பது உண்மை. உங்களுக்கு ஹேமவதியிடம் எவ்வளவு நம்பிக்கையும் மதிப்பும் இருக்கிறதோ அவ்வளவு மதிப்பும் நம்பிக்கையும் எனக்கு மோகனதாஸினிடம் உண்டு. அவன் ஒருகாலும் அப்படிப்பட்ட ஒரு மாதை மோகிக்கவே மாட்டேன். அதிலும் அவனாகப் போய்ப் பலாத்காரம் செய்தானென்பது எதிர்பார்க்க முடியாத அபாண்ட மாகும். அவன் எந்தப் பெண்ணையுமே மோகித்திருக்க மாட்டானென்று கூட நான் நினைத்தேன். ஆனால் துப்பாக்கிச் சண்டை நடந்த தினத்துக்கு, மூன்நாள் இரவு அவன் பல கடிதங்களை எழுதி வைத்ததில் எனக்கு எழுதிவைத்த கடிதத்தில் தான் ஒரு பெண்ணை நேசிப்பதாகத் தெரிவித்திருந்தான். அதன் பிறகுதான் அவனுக்கு மோகம் என்பதே இன்னதென்று தெரிந்திருக்கிறதென அறிந்தேன். இருந்தாலும் அவன் ஹேமவதி சீமாட்டியிடம் போய்ப் பலாத்காரம் செய்திருப்பானென்பதை நம்ப முடியாது' என்றார். அப்போது மனமோகனர், 'ஐயா, செல்வநாதரே! உங்கள் அபிப்பிராயத்தில் நீங்கள் சொல்வதெல்லாம் சரியாகத் தோன்றலாம். ஆயினும் நாங்கள் அதை அப்படியே ஒப்புக்கொள்ள முடியாது. ஹேமவதி சீமாட்டியின்மீது சிறிதும் சந்தேகமில்லை யென்றாலும் அநாவசியமாக அம்மாளைக் கோர்ட்டுக்கு இழுப்பதை நாங்கள் விரும்பவில்லை. நீர் இங்கு வந்ததில் சந்தோஷமே. மோகனதாஸ் விரும்புவதுதானென்ன?' என்று கேட்டார்.

186577